தமிழ் இலக்கிய நயம்

தரம் 10

பாட அலகுகளை உள்ளடக்கிய வினா விடைத் தொகுப்பு



தொகுப்பாக்கம்

இரா. நிஷாந்தன்

ஆசிரியர்

கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

புத்தகசாலை

அலகு – 01

01. புத்தகசாலை எனும் கவிதையின் ஆசிரியர் யார்?

→ பாரதி தாசன்

02. பாரதி தாசனின் இயற் பெயர் என்ன?

→ கனக சுப்புரத்தினம்

03.பாரதிதாசனின் படைப்புக்கள் எவை?

→ வீரத்தாய், பாண்டியன் பரிசு, போர் மறவன், இருண்ட வீடு

04. தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தனிலே..

அ. கையோகம் என்பதன் கருத்து யாது?

→ இணைந்திருத்தல்

ஆ. கவிஞர் எதனுடன் கையோகம் புரிந்ததாக கூறுகின்றார்?

→ புத்தகத்துடன்

05. மனிதரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும் மனோபாவம்
வானைப் போல் விரிவடைந்து..

அ. இவ்வடிகளில் புலப்படும் அணி யாது?

→ உவமையணி

ஆ. மனிதர் எதனை காண வேண்டும் என கவிஞர் விரும்புகின்றார்?

→ அன்பு நெறி

06. புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில் புத்தகசாலை
வேண்டும் நாட்டில் யாண்டும்..

அ. புத்தகசாலையால் எத்தகு வாழ்வு கிடைக்கின்றது?

→ தூய்மையான புது வாழ்வு

ஆ. யாண்டும் என்பதன் கருத்து யாது?

→ எங்கும், எல்லா இடமும்

07. தமிழர்க்கு தமிழ் மொழியில் சுவடிச்சாலை
சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்..

அ. சுவடிச்சாலை என்றால் என்ன?

→ புத்தகசாலை, நூலகம்

ஆ. சர்வகலாசாலை என்றால் என்ன?

→ பல்கலைக்கழகம்

www.lkedu.lk

8. கவிஞர் நாட்டில் புத்தகசாலை எங்கும் வேண்டும் எனக் கூறுவதன் காரணங்கள் யாவை?

கவிஞர் பாரதிதாசன் புத்தகசாலை நாட்டில் எங்கும் அமைத்திருக்க வேண்டும் என விரும்புகின்றார். அதற்கான காரணங்களை நோக்கும் போது,

→ மனிதர்கள் அன்பு நெறி காண்பதற்கும்,

→ மனிதரது மனோபாவம் விரிவடைவதற்கும்,

→ எம்மிடம் உள்ள சுயநலம் எனும் இருள் அகலவும்,

→ சகல மக்களும் ஒன்றென உணர்வதற்கும்,

→ எம்மிடையே உயர் எண்ணங்கள் வழங்கிடவும்

→ மக்கள் தூய்மையடைந்து புது வாழ்வு வேண்டுவதற்கும்

என்பவற்றிற்காக புத்தகசாலை நாட்டிலே எங்கும் அமைய வேண்டும் என கவிஞர் கூறுகின்றார்.

09. கவிஞர் காண விளைகின்ற புத்தகசாலை எத்தகையது என்பதை விளக்குக?

கவிஞர் காண விரும்புகின்ற புத்தகசாலை குறித்து நோக்கும் போது,

→ தமிழ்ர்க்கு என தமிழ் மொழியில் தனியாக புத்தகசாலை அமைந்திருக்க வேண்டும்.

→ அங்கு பிறமொழி நூல்கள் எல்லாம் மொழிபெயர்த்து அமைந்திருத்தல் வேண்டும்

→ கவிதை நூல்கள், உரைநடை நூல்கள் என்பன துறை துறையாக அடுக்கபட்டிருக்க வேண்டும்.

→ அழகிய செய்தித்தாள்கள் பலவும் குவிந்திருக்க வேண்டும்.

→ விரும்பும் நூல்கள், புதிய நூல்கள் என பலவகையான புத்தகங்களும் அடுக்கி வைத்திருத்தல் வேண்டும்

எனவாறு அதனை நோக்கிட முடிகின்றது.

10. புத்தகத்தினை நாடி வருவோரை எவ்வாறு நடாத்த வேண்டும் என கவிஞர் கூறுகின்றார்?

புத்தகம் ஒன்றினை வாசிப்பதற்கு நம் இல்லம் நாடி வருவோரை எவ்வாறு நடாத்திட வேண்டும் எனக் கவிஞர் பின்வருமாறு கூறுகின்றார்.

→ வாசிக்க வருவோரின் வருகையை ஏற்று மரியாதையுடன் வரவேற்க வேண்டும்.

→ அவர்கள் அமர்வதற்கு ஆசனம் கொடுக்க வேண்டும்

→ அவர்கள் விரும்பும் நூல்களை அவர்களுக்கு கொடுத்திட வேண்டும்

→ புதிய நூல்கள் வந்திருந்தால் அது பற்றி உரைத்திட வேண்டும்.

11. பின்வரும் தொடர்களின் இலக்கியச் சிறப்பினை நயந்து விளக்குக?

☞ அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்

இத் தொடரில் கவிதை நூல்களின் சிறப்பு காட்டப்படுகின்றது. அமுதம் என்பது இனிமையானது. அது கிடைப்பதற்கு அரிதானது. ஆக அந்த அமுதத்தைப் போல இனிமையானது அந்த கவிதை நூல்கள் என்பதை உவமையணியின் மூலம் கவிஞர் கூறுகின்றார். மேலும் செந்தமிழில் அமையப் பெற்றவை அக் கவிதை நூல்கள் என்பதையும் காண முடிகின்றது.

☞ மகாசோதியிற் கலந்ததெனது நெஞ்சம்

இவ்வடியினில் கவிஞரின் பரவச நிலை காட்டப்பட்டுள்ளது. அதாவது புத்தக வாசிப்பில் ஈடுபட்டிருந்த கவிஞர் நெஞ்சமானது மனிதர்களில் மிக உயர்ந்த கவிஞர்களின் உள்ளத்து பேரொளியுடன் சென்று கலந்து விட்டது என்பதன் ஊடாக கவிஞர் உள்ளம் பிற கவிஞர்களின் நூல்களை படித்து இன்புறுவதில் விரும்பம் உடையது என்பதை காண முடிகின்றது.

12. புத்தகசாலை ஒன்றின் பயன்களாக கவிதையில் கூறப்படுபவை யாவை?

இக் கவிதையின் ஊடாக புத்தகசாலையின் வாயிலாகப் பெறக் கூடிய பயன்கள் பற்றி நோக்கும் போது,

→ புவியில் உள்ள இயற்கை அம்சங்களை உணர்ந்திட முடியும்

→ புத்துணர்வானது உள்ளத்தில் தோன்றிடச் செய்யும்

→ மனிதர் அன்பு நெறி காண்பதற்கு வழிவகுத்திடும்

→ சுயநலம் எனும் இருளைப் போக்கிடச் செய்யும்

→ மக்கள் தூய்மையடைந்து புதுவாழ்வு வாழ்ந்திட வழிவகுக்கும்

→ தேவையான நேரத்தில் தேவையான விடையத்தினை பெற உதவுவது

www.ikeduk.lk

பத்தி எழுத்துக்கள்

அலகு – 02

1. மரம் என்பது உயர்திணை

1.. மரம் என்பது உயர்திணை என்பதன் ஆசிரியர் யார்?

கவிக்கோ அப்துல் ரஹ்மான்

2. சரித்திரச் சாலையில் நிலைபெற்றுள்ள மரங்கள் எவையென பத்தியாசிரியர் கூறுகின்றார்?

→ போதி மரங்கள்
→ அறக் குடைகள்
→ காவல் மரங்கள்
→ ஊர்ப் பொது மன்ற மரங்கள்
→ பொருட்பாலின் அத்தாணி மண்டபங்கள்
→ வசந்த மரங்கள்
→ மன்மதனின் அம்பறாத் தூணிகள்
→ கல்லால மரங்கள்

3. மனிதன் படைத்த மரங்கள் எவையென பத்தியாசிரியர் கூறுகின்றார்?

→ தூக்கு மரங்கள்
→ சிலுவை மரங்கள்
→கொடி மரங்கள்
→ கழு மரங்கள்
→ மாமிசப் பட்சிணி மரங்கள்
→ வெய்யிலை உற்பத்தி செய்யும்
→ மரங்கள் முட்களை கொண்ட மரங்கள்

4. மனிதனது வாழ்க்கையில் மரம் எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றது? (மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை மரம் தரும் பயன்கள்)

இப் பகுதியில், மனிதனது பிறப்பு முதலாக மனிதனது இறப்பு வரையான காலப்பகுதியில் பற்பல கட்டங்களில் மரமே துணை புரிகின்றது எனலாம்.

→ குழந்தைப் பருவத்தில் தொட்டில்
→ நடை பழகும் பருவத்தில் நடைவண்டி
→ பள்ளீப் பருவத்தில் ஏடுகள்
→ மணப்பருவத்தில் கட்டில்
→ கிழப்பருவத்தில் ஊன்று கோல்
→ இறந்த பின் சிதையின் மேல் கட்டைகள்

இவை தவிர, மனிதனது வாழ்வில்,

→ மனிதனது தாகத்திற்கு பானம்
→ மனிதனது பசிக்கு உணவு
→ மனிதன் உடுக்க உடை
→ மனிதன் வசிக்க வீடு
→ மனிதன் நோய்க்கு மருந்து
→ மனிதன் பயணத்திற்கு சக்கரங்கள்
→ மனிதன் சுவாசிக்க காற்றைத் தருதல்

05. மரத்திற்கும், மனிதனுக்கும் இடையில் பத்தியாசிரியர் காட்டும் வேற்றுமைகள் எவை?

மரம் என்பது உயர்திணை எனும் இப் பாடப் பகுதியில், மரத்திற்கும் மனிதனுக்கும் இடையிலாக பத்தியாசிரியர் காட்டி நிற்கும் வேறுபாடுகளை நோக்குவோமாயின்,

→ மனிதனுக்கு மண் புதைகுழி, மரத்திற்கோ கருவறை

→ மண்ணின் மைந்தன் மனிதன் அல்லன், மரமே மண்ணின் மைந்தன்

→ பிறந்த இடத்தில் பற்று வைத்து வரவு வைப்பவை மரங்கள், பிறந்த இடத்தில் செலவு வைப்பவன் மனிதன்

→ மரம் சாய்ந்தால்காட்டிலிருந்து வீட்டுற்கு வரும், மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டிற்கு செல்வான்

→ மரம் புழுதியில் மலர்களையும், கழுநீர்கனிகளையும் தருகின்றது. மனிதனோ மலர்களில் புழுதியையும், கனிகளில் கழுநீரையும் செய்கின்றான்.

→ மரம் எல்லாம் கொடுப்பதற்காக கைகளை நீட்டுகின்றன. மனிதனோ வாங்குவதற்காக கைகளை நீட்டுகின்றான்

→ மரம் வானத்தை நோக்கி வளர்கின்றது, மனிதன் புழுதியில் புரழுகின்றான்

→ மரங்களில் எல்லாம் கொடுக்கின்ற சீபிகள், சீதக்காதிகள் ஆனால் மனிதரில் ஒரேயொரு சீபி ஒரேயொரு சீதக்காதி.

06. மரம் என்பது உயர்திணை என்பதை வலியுறுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகள் எவை?

மரம் என்பது உயர்திணை எனும் தன் கருத்தினை உறுதிப்படுத்திட பத்தியாசிரியர் பல உத்திகளை கையாண்டுள்ளார்.

→ தானே கதை சொல்லியாக இடம்பெற்றிருத்தல்

→ சிறிய சிறிய வசனங்களைக் கொண்டதாக இடம்பெற்றிருத்தல்

→ வாசகர்களை நோக்கி வினாக்களை தொடுத்து பின் அதற்கு பதில் கூறுவதாய் அமைதல்

→ பல ஆதாரங்களை முன்வைத்திருத்தல்

→மனித வாழ்வில் மரம் பெறும் முக்கியத்துவத்தை ஆதாரத்துடன் கூறியிருத்தல்.

→ மரம் இன்றி மனிதால் வாழ முடியாது என்பதை எடுத்துரைத்தல்

→ மரம் என்பது ஒவ்வொரு இடத்திலும் பெறும் முக்கியத்துவங்களை காட்டியிருத்தல்

→ நகைச் சுவை சார்ந்தாக கருத்துக்களை முன்வைத்திருத்தல்

→ தர்க்க ரீதியான பல கருத்துக்களை முன்வைத்திருத்தல்

2. மென்மையே வாழும்

1.. மென்மையே வாழும் எனும் இப் பகுதயின் ஆசிரியர் யார்?

→ கவிக்கோ அப்துல் ரஹ்மான்

2.. வாழ்க்கை என்பது போராட்டம், இதில் வலிமையானவையே வாழும்.. எனக் கூறியவர் யார்?

→ டார்வின்

3. மென்மையானவையே நீண்ட காலம் வாழும் எனக் கூறியவர் யார்?

→ கன் ஃ பூசியஸ்

4. எனக்கு ஒன்றும் தெரியவில்லை, நீங்களே சொல்லிவிடுங்கள். இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

→ சீடனால் குரு கன் ஃ பூசியஸ்க்கு

5. வாளை உருவியவன் வாளாலே சாவான், இக் கூற்றை கூறும் நூல் எது?

→ பைபிள்

6. பாலைப் பண் வழிப்பறிக் கொள்ளையர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களை கீழே போட்டுவிடச் செய்யும்..

அ. இக் கூற்று இடம்பெறும் நூல் எது?

→ பொருநராற்றுப்படை

ஆ. மேற்படி நூலின் ஆசிரியர் யார்?

→ முடத்தாமக்கண்ணியார்.

7. போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே..

அ. இக் கூற்றினை காப்பியம் செய்யும் நூல் எது?

→ திருக்குறள்

ஆ. வதன வனப்பு என்பதன் கருத்து யாது?

→ முக அழகு

8. வன்மையின் வெற்றி யாது? மென்மையின் வெற்றி யாது?

→ வன்மையின் வெற்றி புறவயமானது,
→ மென்மையின் வெற்றி அகவயமானது

www.lkedu.lk

9. மென்மையே வாழும் என்பதற்கு பத்தியாசிரியர் முன்வைக்கும் கருத்துக்கள் எவை?

இப் பகுதியில் வலிமையானவை விரைவில் அழிந்து மென்மையானவை நீண்ட காலம் வாழும் எனும் வெளிப்பாட்டினை பத்தியாசிரியர் அழகுற எடுத்துரைக்கின்றார். அதாவது மென்மையே வாழும் என்பதற்காக பல காரணங்களை அவர் முன்வைக்கின்றார்.

→ பல் வலிமையானது ஆனால் வயதால் அது விழுந்து விடுகின்றது ஆனால் நாக்கு மென்மையானது அது இறந்த பின்னும் இருக்கின்றது.

→ நீர் மென்மையானது ஆனால் அது வலிமையான அணைகளை உடுத்து விடுகின்றது.

→ நெருப்பு வலிமையானது. நீர் மென்மையானது ஆனால் நெருப்பை நீர் அணைத்து விடுகின்றது.

→ புயலினால் வலிமையான மரம் விழுந்து விடுகின்றது. ஆனால் மென்மையான நாணல் தப்பிக் கொள்கின்றது.

→காற்று மென்மையானது. ஆனால் அது புயலாக மாறினால் வலிமையானவற்றை சாய்த்து விடுகின்றது. ஆனால் காற்று அழிவதில்லை

→ வலிமையான கல்லை மென்மையான மர வேர் பிளந்து விடுகின்றது.

வுலிமையானவர்களே போருக்கு அனுப்பப்படுகின்றனர். மென்மையானவர்கள் தப்பித்து விடுகின்றனர்.

→ வலிமை படைத்த ரவுடிகள் விரைவில் இறந்து விடுகின்றனர். மென்மையானவர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள்

→ கொடிய மனம் படைத்தவர்களையும் மென்மையான இசை தன் வசமாக்கிவிடுகின்றது.

→ வன்மையான பொருட்கள் நுழைய முடியாத உடலில் மென்மையான எஸ்ரே கதில் பாய்ந்து செல்கின்றது.

வலிமை படைத்த ஆண்களையும் மென்மை படைத்த பெண்கள் தம் அன்பினால் கட்டிப்போட்டு விடுகின்றனர்.

10. தான் கூற வந்த கருத்தினை வெளிப்படுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகள் எவை?

மென்மையே நீண்ட காலம் வாழும் எனும் தன் கருத்தினை உறுதிப்படுத்திட பத்தியாசிரியர் பல உத்திகளை கையாண்டுள்ளார்.

→ சீன நாட்டு அறிஞரின் கருத்துக்களை முன்வைத்திருத்தல்

→உரையாடல் பாங்கினை கையாண்டிருத்தல்

→ இலக்கியங்களில் இருந்து உதாரணங்களை காட்டியிருத்தல்

→ வலிமையானவை மற்றும் மென்மையானவை பற்றி ஒப்பீட்டு நோக்கினை காட்டியிருத்தல்

வாய்மொழிப் பாடல்கள்

அலகு – 03

மருத்துவிச்சி வாழ்த்து

1. மருத்துவிச்சி வாழ்த்து என்பதன் கருத்து யாது?

குழந்தை பிறப்பதற்காக பிரசவம் பார்க்கும் மருத்துவிச்சி அக் குழந்தையை தன் கைகளில் தூக்கி அதனை வாழ்த்திப் பாடும் பாடல் இதுவாகும்.

2. இப் பாடலில் மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு எவ்வாறு புலப்படுகின்றது?

இப் பாடல் வாயிலாக மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்குபின்வருமாறு வெளிப்படுகின்றது.

→ குழந்தையை வாழ்த்திப் பாடும் போது குழந்தையின் தாய் தந்தையர் மற்றும் உறவினர்களை கூறி அவர்களை வாழ்த்துதல்

→ மேலும் குழந்தையின் சுற்றத்தவர்களும், அயலவர்களும் வாழவேண்டும் எனப் பாடுதல்

→ குழந்தையை உறவு முறை கூறி அழைப்பதன் ஊடாக மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு வெளிப்படுகின்றது.

→ குழந்தை நல்ல முறையில் வளர வேண்டும் என வாழ்த்திப் பாடுதல்

3. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருத்துவிச்சி விரும்புகின்றாள்?

→ மன்னர்களுக்கெல்லாம் மன்னனாக குழந்தையானது வாழ வேண்டும் எனல்.

→ மன்னர்க்குரிய மணி முடியும் பெற்று வாழ வேண்டும் கூறுதல்

→ கல்வி போதிக்கும் குருவுக்கு நல்ல பிள்ளையாக வாழ வேண்டும் எனக் கூறுதல்

→ கடவுளுக்கும் நல்ல பிள்ளையாக இருந்து வளர வேண்டும் எனப் பாடுதல்

4. இப் பாடலில் கிராமிய மண் வாசனை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

கிராமம் ஒன்றின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் பாடப்பட்டிருத்தல்

கிராமத்தில் வாழ்பவர்கள் ஒற்றுமை கொண்டவர்களாக உறவு முறையில் பிணைப்புக் கொண்டவர்களாக வாழுதல்

பல உறவுமுறைகள் கூறி அழைக்கும் தன்மை காட்டப்படுதல்

உ.ம் – அப்பு, ஆச்சி, மாமன், மாமி, கொப்பர்

பிரசவம் பார்ப்பவர்க்கு பரிசுப் பொருட்கள் கொடுத்தல்

உ.ம் – உள்ளி, நெல், அரிசி, மஞ்சள்

குருவையும், இறைவனையும் மதிக்கின்ற, போற்றுகின்ற தன்மை காணப்படல்

www.ikeda.lk

இனிது என..

அலகு – 04

குறுந்தொகைப் பாடல்

முளி தயிர் பிசைந்த காந்தள் மென்விரல்
கமுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண் கண் குய்ப்புகை கமழ
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது என கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே

1. இப் பாடலைப் பாடியவர் யார்?

→ கூடலூர் கிழார்

2.கடிநகர் என்றால் என்ன?

→ திருமணமான பெண் கணவனுடன் தனியாக வாழும் இடம்

3. கலிங்கம் என்பது எதனைக் குறிக்கின்றது?

→ ஆடை, பட்டாடை

4. குவளை உண் கண் என்பதன் பொருள் யாது?

→ குவளை மலர் போன்ற கண்

5.கமுழ என்பது இங்கு குறிக்கும் கருத்து யாது?

→ நிறைய

6. இப் பாடலில் இடம் பெற்றுள்ள அணிகளை குறிப்பிட்டு விளக்குக?

→ உவமையணிகள்

- **காந்தல் மலர் போன்ற விரல்கள்**

உவமானம்	– காந்தல் மலர்
உவமேயம்	– தலைவியின் கை விரல்கள்
பொதுத் தன்மை	– மென்மை

- **குவளை மலர் போன்ற கண்கள்**

உவமானம்	– குவளை மலர்
உவமேயம்	– தலைவியின் கண்கள்
பொதுத் தன்மை	– அழகு, மென்மை

7. தலைவியின் அழகு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?

→ காந்தல் மலர் போன்ற மென்மையான விரல்களை உடையவள்

→ குவளை மலர் போன்ற மை இடப்பட்ட கண்களைக் கொண்டவள்

→ ஒளி பொருந்திய நெற்றியை உடைய முக அழகு கொண்டவள்

www.tkedu.lk

7. தலைவன் மீது கொண்ட தலைவியின் அன்பு எவ்வாறு காட்டப்படுகின்றது?

இப் பாடல் வாயிலாகத் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு பற்றிப் பின்வருமாறு நோக்கலாம்.

→ தலைவனுக்கு உணவு சமைக்க விருப்பம் கொண்ட தலைவி தனக்கு நன்றாகச் சமைக்கத் தெரியாது விடினும் விருப்புடன் உணவு சமைக்க முற்படுகின்றாள். அதன்படி நன்றாக முற்றிய தயிரை தன் காந்தல் மலர் போன்ற மென்மையான விரல்களால் பிசைகின்றாள் தலைவி.

→ தயிரைப் பிசையும் போது நழுவிச் செல்லும் தன் உயர்தர ஆடையை மாற்றாமல் தயிர் பிசைந்த தன் கைகளால் அவற்றைச் சரி செய்கின்றாள்.

→ இது தவிர உணவை தாளிக்கும் போது அத் தாளிப்பின் புகையானது குவளை மலர் போன்ற கண்களில் நிறைந்து வருத்துகின்றது. அதையும் பொருட்படுத்தாமல் உணவு சமைப்பதில் ஆர்வம் காட்டுகின்றாள் தலைவி.

→ மேலும் தான் சமைக்கும் குழம்பினை தானே அருகில் இருந்து துளாவிச் சமைக்கின்றாள் காரணம் அதன் சுவை மாறி விடக் கூடாது என்பதற்காக தலைவி இவ்வாறு செயற்படுகின்றாள்.

இவ்வாறு தலைவி செயற்பட்ட விதம் தலைவன் மீது அவள் கொண்ட அன்பினை எடுத்துரைக்கின்றது.

8. தலைவியின் செயற்பாடுகளின் ஊடாக வெளிப்படும் இல்லறப் பண்புகள் எவை?

இப் பகுதியில் தலைவியின் செயற்பாடுகளின் ஊடாக இல்லறப் பாங்கானது பின்வருமாறு வெளிப்படுகின்றது.

→ கணவன் மீது அன்பு கொண்டவளாக விளங்குகின்றாள். இது இல்லறத்தின் சிறந்த பண்பாகும்.

→ தன் கணவனுக்காக உணவு சமைக்க முற்படுதல்

→ தன் மென்மையான கை விரல்களால் தயிரைப் பிசைதல்

→ தாளிக்கும் போது அதன் புகை கண்களில் நிறைந்த போது அதைப் பொருட்படுத்தாமல் உணவு சமைத்தல்

→ உயர்தரமான ஆடை என்றும் கருதாமல் தன் அழுக்கான கையை அதில் துடைத்தல்

→ தான் சமைத்த உணவை அன்புடன் கணவனுக்குப் பரிமாறுதல்

→ கணவன் இனிது என கூறி உண்பது கண்டு மகிழ்ச்சி அடைதல்

கவிதை 2 – அமுதம்

தங்க வளைக் கைகள் தொட்டுச் சமைத்தது.. எனும் பாடலை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

01 . இப் பாடலைப் பாடியவர் யார்?

→ சச்சிதானந்தன்

02. விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட விண்ணின் அமுதமையா... இங்கு வெளிப்படும் அணி யாது?

→ உயர்வு நவிற்சியணி – உணவை விண்ணின்அமுதமாக உயர்த்திக் கூறுதல்

03. பாதி வழி வந்து தாமரைக் கை தந்த பச்சை அமுதமையா.. இங்கு தாமரைக் கை என்பதில் உள்ள அணி யாது?

→ உவமையணி – தாமரை மலர் போன்ற கைகள்

04. மனைவி சமைத்த உணவை கணவன் எவ்வாறு புகழ்ந்துரைக்கின்றான்?

மனைவி சமைத்துள்ள உணவினை தலைவன் பின்வருமாறு புகழ்ந்துரைக்கின்றான்

→ மனைவி சமைத்த உணவு நன்றாக மணம் வீசுகின்றது எனக் கூறுதல்

→ அவளது அன்பு கலந்துள்ள உணவு எனக் கூறுதல்

→ உணவில் உப்பு அதிகமாயினும் அது ஒருவித இனிமையைத் தருகின்றது எனக் கூறுதல்

→ வீட்டுப் பிரிந்த வேதனையால் அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் பட்ட விண்ணின் அமுதம் எனக் கூறுதல்

→ பொரியல் நன்றாக கரிந்து போயினும் அதில் அவளது அன்பு மணக்கின்றது.

→ உணவு நன்றாக வேகாது இருப்பினும் விந்தையான சுவையாக உள்ளது எனக் கூறுதல்

→ சின்னஞ் சிறு கைக் குழந்தையாக தலைவி அளைந்த இவ் உணவு தெய்வ அமுதமாக இருக்கின்றது என உரைத்தல்

→ தாமரை போன்ற மென்மையான கைகளால் சமைத்த இவ் உணவு பச்சை அமுதமாக விளங்குகின்றது

→ தன் அன்பாகிய கயிற்றினால் கட்டப்பட்ட உணவு இது என கூறுதல்

→ மேலும், விண்ணின் அமுதம், தெய்வ அமுதம், விந்தையான சுவையுடையது, பச்சை அமுதம் எனவாறு புகழ்ந்துரைத்தல்

www.ikeou.lk

05. அமுதம் எனும் தலைப்பு இக் கவிதைக்கு பொருந்துமாற்றினை விளக்குக?

இக் கவிதைக்கு அமுதம் எனும் தலைப்பு மிகப் பொருத்தமானதே. ஏனெனில் மனைவி சமைத்த உணவை கணவன் புகழ்ந்துரைக்கும் போது பல இடங்களில் அமுதம் எனக் குறிப்பிடுகின்றான். குறிப்பாக அமுதம் என்பது தேவர்களின் உணவாகும். அது மானிடர்க்கு கிடைப்பது அரிதாகும். ஆனால் மனைவி சமைத்த உணவு அமுதம் போன்று இருப்பதாக தலைவன் உரைப்பதனாலும் இக் கவிதைக்கு அமுதம் எனும் தலைப்பு பொருந்தமானதே எனலாம்.

06. பின்வரும் தொடர்களில் உள்ள இலக்கியச் சிறப்பினை விளக்குக?

● வீடுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட விண்ணின் அமுதமையா..

இவ்வடிகளில் வெளிப்படும் இலக்கியச் சிறப்பினை நோக்கும் போது, தன் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றமையால் தலைவி பிரிவின் காரணமாக அவள் கண்கள் கண்ணீர் சொரிந்தன. அந்தக் கண்ணீர் துளிகள் சமைத்த உணவினில் விழுகின்றது. ஆகையால் அந்த உணவு விண்ணின் அமுதமாகப் படுகின்றது தலைவனுக்கு. இங்கு விண்ணின் அமுதம் என்பதில் உயர்வு நவிற்சியணி புலப்படுகின்றது.

● பாதி வழி வந்து தாமரைக் கை தந்த பச்சை அமுதமையா...

இவ்வடிகளில் புலப்படும் இலக்கியச் சிறப்பினை நோக்குமிடத்து, தலைவன் நேரம் சென்றமையால் விரைந்து சென்று விடவே தலைவி பாதி வழியில் ஓடி வந்து தான் சமைத்த உணவைத் தன் தாமரை மலர் போன்ற கைகளால் தலைவனுக்க கொடுக்கின்றாள். இங்கு தாமரை மலர் போன்ற கைகள் என்பதால் தலைவியின் கைகளின் மென்மை உவமையணியின் மூலம் காட்டப்பட்டுள்ளது

தாய்ப் பசு - சிறுகதை

அலகு – 05

1. தாய்ப்பசு எனும் சிறுகதையின் ஆசிரியர் யார்?

→ அகிலன்

2. சிறுகதையாசிரியரின் பிற படைப்புக்கள் எவை?

→ சித்திரப்பாவை – ஞான பீட விருது

→ வேங்கையின் மைந்தன் – சாகித்ய அகடமி விருது

→ பாவை விளக்கு

→ கயல்விழி

3.தாய்ப்பசு சிறுகதை உணர்த்தும் பிரதான கருத்தியல் யாது?

→ ஜீவகாருண்யத்தின் அவசியம்

4. கிடாரிக் கண்ணுக்குட்டியா இருந்தாலும் பரவாயில்லை.. இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

→ பால்க்கரனால் மாடசாமிக்கு

**5. பசுவின் மடியும் பால் சுரந்தது கண்களில் நீரும் வழிந்தது..
இவ்வடிகளில் எத்தகு உணர்வு புலப்படுகின்றது?**

→ கவலை உணர்வு

**6. அந்தக் காளை மாட்டுக்கு மஞ்சு விரட்டு நினைவு வந்து விட்டது இங்கு
மஞ்சுவிரட்டு என்பதன் கருத்து யாது?**

→ ஜல்லிக்கட்டு

**7. பார்த்தாயா, உன் மகனை உன்னைப் போலவே பிறந்திருக்கின்றான்.. இக் கூற்று
யாரால் யாருக்கு உரைக்கபட்டது?**

→ தாய்ப் பசுவால் காளை மாட்டிற்கு (கண்களால் கூறிக் கொள்ளுதல்)

08. இச் சிறுகதையில் பசுவின் தாய்மை உணர்வு வெளிப்படும் சந்தர்ப்பங்கள் பற்றித் தெளிவுறுத்துக?

இச் சிறுகதையில் பசுவின் தாய்மை உணர்வு வெளிப்படும் தன்மைகளை பின்வருமாறு காண முடியும்.

→ கன்றுக் குட்டியும், குமரனும் அருகே வரும் போது தாய்மை உணர்வு பொங்கிட இருவரையும் மாறி மாறி நாக்கால் தடவியமை.

→ காளை மாடு குமரனை தாக்க முற்படுகையில்அதன் குறுக்கே சென்று குமரனும் என் பால் குடித்து வளர்ந்தவன் அவனும் என் மகன் தானே எனக் கூறுதல்

→ தன் கன்று பசியோடு இருக்கும் நிலை கண்டு தாய்ப் பசு வேதனை கொள்ளுதல்

→ தன் கன்று அருகில் இல்லாத போது தாய்ப்பசுவின் மடியில் பால் சுரந்தது, அதன் கண்களில் நீரும் வழிகின்றது இது பசுவின் தாய்மையின் வெளிப்பாடாகும்.

→ பசுவானது தன் எதிரில் வைக்கப்பட்ட பொங்கலை முதலில் முகர்ந்து பார்த்து கண்ணீர் விட்டது,பின் தன் கொம்புகளால்அப் பாத்திரத்தை மோதித் தள்ளியது இதுவும் தாய்மை உணர்வின் வெளிப்பாடாகும்.

09. காளை மாடசாமியின் மகனைத் தாக்குவதற்கு காரணமாக அமைந்தது யாது?

மாடசாமி, தன்னுடைய கன்றுக் குட்டிக்கு துன்பம் இழைத்தமையை கண்ணுற்றது காளை மாடு. அது மட்டுமன்றி அக் கன்றுக் குட்டியை பால் குடிக்க விடாமல், அதைப் பிடித்துக் கட்டி பின் அது இறந்து போவதற்கு மாடசாமியே காரணமாக இருந்தவன் எனக் கருதியது காளை. மேலும் பசுவின் வேதனை கண்டு கோபம் பொங்கிடவே, தன் கன்றுக் குட்டியின் இழப்பிற்கு பழி வாங்கும் நோக்கில் மாடசாமியின் மகன் குமரனை அக் காளை தாக்குவதற்கு முற்பட்டது.

09. ஜீவகாருண்யத்தின் தேவையை அல்லது அவசியத்தை இச் சிறுகதை எவ்வாறு புலப்படுத்துகின்றது?

ஜீவகாருண்யம் என்பது உயிர்கள் மீது அன்பும், இரக்கமும் கொள்வதாகும். மனிதன் தன்னைக் காட்டிலும் குறைந்த அறிவு படைத்த பிற உயிர்கள் மீது கருணை கொண்டு அவற்றை பாதுகாப்பதே ஜீவகாருண்யமாகும். இச் சிறுகதையில் தாய்ப்பசுவின் தாய்மை உணர்வும், அதன் செயல்களும் மனிதரைக் காட்டிலும் மேலுயர்ந்ததாக அமைகின்றது. ஆனால் மனிதனாகிய மாடசாமியே தாய்ப்பசுவின் கன்றினை வருத்தி அதன் மரணத்திற்கு காரணமாக அமைகின்றான். ஆனாலும் மாடசாமியின் மகனை கொன்று பழி தீர்த்துக் கொள்ள முற்பட்ட காளை மாட்டினைக் கூட தாய்ப்பசு தடுத்து நிறுத்துகின்றது. ஆக உயிரினங்கள் மீது நாமும் இரக்கம் கொண்டு அவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை இச் சிறுகதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

●●●●●●●

www.ikeotik

கம்பராமாயணம் – கிஷ்கிந்தைப்படலம்

(அலகு 06)

→ கம்பராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டதாகும்

→ கம்பரால் ஏர் எழுபது, சடகோப அந்தாதி, சரஸ்வதி அந்தாதி முதலிய இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன.

→ கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம், பால காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தை காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்கள் காணப்படுகின்றன.

→ கிஷ்கிந்தா காண்டத்தில் இடம் பெற்றுள்ள பிரிவு கிஷ்கிந்தைப் படலமாகும்.

→ இராமனுக்கு வாக்களித்து சென்ற சுக்ரீவன் வருகை தாமாதம் ஆகவே கோபம் கொண்ட இராமன் இலக்குவனனுடன் ஆலோசனை நடாத்துதல், பின் இலக்குவன் கிஷ்கிந்தை நோக்கி வருதல், இலக்குவன் வருகை கண்டு வானரங்கள் அச்சம் கொள்ளுதல், அனுமன் தாரையிடம் உபாயம் கூறுதல், தாரை வானர மகளிருடன் இலக்குவனனை வழிமறித்தல், தாரை இலக்குவனனுடன் உரையாடுதல், தாரை கோலம் கண்டு இலக்குவனன் வருந்துதல் என்பன வரையான பாடல்களை நாம் காண முடியும்.

01. ✍ குறு வினா – விடை

01.“ மொய்ப்பினோய் சொன்ன எல்லையின் ஊங்கினும்
தூங்கினன் மன்னன் வந்திலன்....

அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

- இராமனால் இலக்குவனனுக்கு

ஆ. மன்னன் எனக் கருதப்படுவது யார்?

- சுக்கிரீவன்

02. “ கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால் சென்று
மற்றவன் சிந்தையைத் தேர்குவாய்...

அ. சிந்தையை தேர்குவாய் என்பதன் பொருள் யாது?

- ஆராய்ந்து அறிந்து கொள்வாய்

ஆ. இராமன் தகுந்த செயல் என எதனை கூறுகிறான்?

- சுக்கிரீவனை கொல்லுவதே அவனை குற்றத்திலிருந்து விடுவிக்கும் செயல் எனக் கூறினான்.

03.“ வானரங்கள் வெருவி மலை ஓரீஇ கான் ஒருங்கு படர
அக்கார் வரை...

அ. வானரங்கள் என்பதன் பொருள் யாது?

- குரங்குகள்

ஆ. வெருவி என்பதன் பொருள் யாது?

- பயந்து, அச்சமடைந்து

04. " அன்ன காலையின் ஆண்தகை ஆளியும்
பொன்னின் நல்நகர் வீதியில் புக்கனன்...

அ. ஆண்தகை ஆளி என்பதன் விளக்கம் யாது?

*** ஆண்களில் சிறந்த சிங்கம் போன்றவன் (இலக்குவன்)**

ஆ. நல்நகர் எனக் குறிக்கப்படுவது யாது?

*** கிஷ்கிந்தை நகரம்**

05." நீரெலாம் அயல் நீங்குமின் நேர்ந்துயான்
வீரன் உள்ளம் வினவுவல் என்றலும்...
. அ. இக்கூற்றை கூறியது யார்?

*** தாரை**

ஆ. நீரெலாம் எனக் கருதப்படுபவர்கள் யாவர்?

***அங்கதன் முதலான வானரர்கள்.**

06."புரசை யானை அன்னான் புகலோடும்
அவ் விரைசெய் வார்குழல் தாரை, விலக்கினாள்...

அ. இங்கு இடம்பெற்றுள்ள அணியினை விளக்குக.?

*** உவமையணி – புரசை யானை அன்னான்**
கழுத்தில் அணியப் பெற்ற கயிற்றையுடைய யானை போன்றவன்

ஆ. தாரையின் சிறப்பு எவ்வாறு புலப்படுகின்றது?

*** நறுமணம் மிக்க நீண்ட கூந்தலை உடையவள்**

07. "தாமரை வதனம் சாய்ந்து தனு நெடுந் தரையின் ஊன்றி
மாமியர் குழுவின் வந்தானாம் என...

அ. வதனம், தனு என்பதன் கருத்து யாவை?

*** வதனம் – முகம்**
*** தனு – வில்**

ஆ. மாமியர் குழுவின் வந்தனாம் என்பது யார்?

*** இலக்குவனன்**

08. " ஜயநீ ஆழி வேந்தன் அடிஇணை பிரிகிலாதாய்
எய்தியது என்னை என்றாள்...

அ. ஆழி வேந்தன் எனக் கருதப்படுபவன் யார்?

*** இராமன்**

ஆ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

*** தாரையால் இலக்குவனுக்கு**

09.“தார்குலாம் அலங்கல் மார்பன் தாயரை நினைந்து நைந்தான்...

அ. இலக்குவன் சிறப்பு எவ்வாறு வெளிப்படுகிறது?

* அசைந்து ஒளி வீசுகின்ற மலர் மாலை தரித்த மார்பை உடையவன்

ஆ. தாயரை நினைந்து நைந்தவன் யார்?

* இலக்குவன்

10.“ பூசக் கழுத்தொடு மறையப் போர்த்த நங்கையைக்
கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றான்...

அ. பூசம் என்பதன் கருத்து யாது?

* பாக்குமரம்

ஆ. நயனம் என்பதன் பொருள் யாது?

* கண்கள்

11.“ இவண் ஆய்வளையரோடும் மனையின்
வாயில் வழியினை மாற்றினால் ..
. அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

*அனுமனால் தாரைக்கு

ஆ. ஆய்வளையர் என்பதன் கருத்து யாது?

*ஆராய்ந்து எடுக்கப்பட்ட வளையல்களை அணிந்த மகளிர்.

<u>கட்டமைப்பு வினாக்கள்</u>

01. கிஷ்கிந்தைப்படலத்தில் இராமன், இலக்குவனன் ஆகியோரின் குணப்பண்புகளை தெளிவுறுத்துக.?

<u>✍ இராமன் குணப்பண்புகள்</u>

→ யாவரிலும் முற்பட்டு விளங்குகின்ற பெருவீரனும், சிங்கம் போன்றவனும் ஆவான்.

→ சுக்ரீவன் நண்பன், சுக்ரீவன் அண்ணன் வாலியை கொன்று சுக்ரீவனுக்கு ஆட்சியை மீட்டுக் கொடுத்தவன்

→ கார்காலம் முடிந்தும் சுக்ரீவன் தமக்கு உதவி செய்ய முன்வராத நிலை கண்டு கோபமடைந்தவன்

→ சுக்ரீவன் நிலை அறிய தன் தம்பி இலக்குவனை கிஷ்கிந்தை அனுப்பி வைத்தவன்

→ஆணைச் சக்கரத்தினை உடையவன்.

→ தாம் செய்த உதவியையும், தம்முடன் கொண்ட நட்பினையும் மறந்தது கண்டு சுக்ரீவனிடத்தில் கோபம் கொண்டவன்.

→ கோபம் வெளிப்படும் போது கூட அதனை உடன் வெளிப்படுத்தாது நிதானமாக கடைப்பிடிப்பவன்.

இவ்வாறு இராமனது சிறப்பியல்புகள் மற்றும் குணப்பண்புகளை காணமுடியும்.

✍ **இலக்குவனன் குணப்பண்புகள்**

→ இராமனின் இளவல், இளைய சகோதரன்
→ வலிமை மிக்க தோள்களை உடையவன்
→ இராமன் ஆணை ஏற்று சுக்ரீவன் நிலை அறிய கோபம் கொண்டு கிஷ்கிந்தை நோக்கி வந்தவன்
→ ஆண்களில் சிறந்தவன்
→ ஆண் சிங்கம் போன்றவன்
→ எதையும் சிந்தித்து செயலாற்றுபவன்.
→ பிற பெண்களை தன் கண்கள் கொண்டு நோக்காதவன்
→ கழுத்தில் அணியப் பெற்ற கயிற்றையுடைய யானை போன்றவன்
→ வெற்றி பொருந்திய வீரனானவன்
→ பருத்த மலை போன்ற பெரிய தோள்களை உடையவன்
→ வானர மகளிரை காணாது தன் வதனத்தை வேறுபக்கம் திருப்பியவன்
→ வானர மகளிர் முன் முகமானது கீழ் நோக்க வில்லை தரையில் ஊன்றி நின்றவன்.
→ இராமபிரானை சிறிதளவு கூட விட்டுப் பிரியாதவன்
→ ஆசைந்தாடும் ஒளி வீசும் மலர்மாலை தரித்த மார்பை உடையவன்
→ தன் தாயாரை போன்ற தாரையின் கோலத்தை எண்ணி வருந்தியவன்.
→ மகளிரில் சிறந்த தாரையின் மீது கருணையும், இரக்கமும் கொண்டவன்

இவற்றை,

" ஆண்தகை ஆழியும் பொன்னின் நல்நகர் வீதியில் புக்கனன்...
" நினையும் வீரன் அவ்வழி நோக்கலான்...
" புரசை யானை அன்னான் பகலோடும்,...
" பார்க்கவும் அஞ்சினான் அப்பருவரை அனைய தோளான்..
" தார்குலாம் அலங்கல் மார்பன்...

எனும் பாடலடிகள் வாயிலாக கண்ணுறலாம்.

02. கிஷ்கிந்தைப்படலத்தில் தாரையின் குணப்பண்புகள், தாரையின் தோற்றம் (அழகு) என்பவற்றை மதிப்பிடுக?

✍ **தாரையின் குணப்பண்புகள்**

→ வானர கூட்டத்தவரின் ராஜ மாதாவாக விளங்குபவள்

→ வானர மகளிரில் முதன்மையானவள், சிறப்புடையவள்

→ அனுமனின் அறிவுரைக்கு ஏற்ப செயலாற்றியவள்

→ வானர வீரர்களின் நலனில் அக்கறை கொண்டவள்.

→ இலக்குவனன் கோபத்தை தணிக்க வானர மகளிருடன் அவன் வரும் வழியின் குறுக்கே சென்றவள்.

→ தன் உறுதியான கொள்கையிலிருந்து பின்வாங்காத பெருமை உடையவள்

→ இலக்குவன் கோபம் கண்டு நடுக்கமடைந்து பின் பேசத் தொடங்கியவள்

→ இலக்குவனன் கோபத்தை தன் இனிமையும், தந்திரமுமான பேச்சாற்றல் மூலம் குறைத்தவள்

→ தன் கணவன் இறந்தமையினால் - திருமங்கல கயிறு முதலிய பிற ஆபரணங்களை நீக்கியவள், மலர்மாலை தரியாதவள், மேனியில் வாசணைக் குழம்புகளை பூசதாவள்.

→ பூமியில் தெய்வப்பெண் போன்று விளங்குபவள்

→ அழகிய தோளும், தூய மனமும், நீண்ட கூந்தலும், நீண்ட கண்களும் உடையவள்

→ இசையிலும் இனிய சொற்களையுடையவள்

www.ikedu.lk

✍ **தாரையின் தோற்றம் /அழகுச் சிறப்பு**

→ நறுமணம் வீசும் தாழ்ந்து தொங்கும் நீண்ட கூந்தலை உடையவள்.
→ பூமியில் தெய்வப்பெண் போன்று விளங்குபவள்
→ அழகிய தோளும், தூய மனமும், நீண்ட கண்களும் உடையவள்.
→ இசையிலும் இனிய சொற்களையுடையவள்
→ அழகு விளங்கும் முகத்தை உடையவள்
→ பருத்த மென்மையான தனங்களை உடையவள்
→ பாக்குமரம் போன்ற கழுத்தை கொண்டவள்
→ வானர மகளிரில் சிறப்பு வாய்ந்தவள்.

இவற்றை,

" விரைசெய் வார்குழல் தாரை, விலக்கினாள்..
" பேர்கலாத் தாரை சென்றனள்..
" பூமியில் அணங்கு அனார்தம் பொதுவிடைப் புகுந்து
பொன்தோள் தூமன நெடுங்கண் தாரை..
" ஏர்குலாம் முகத்தினாளை...
" இசையிலும் இனிய சொல்லாள்...
" பொங்கு வெம்முலைகள் பூசக்கழுத்தொடு மறையப் போர்த்த..

எனும் பாடலடிகள் வாயிலாக தாரையின் தோற்றம், அழகுச் சிறப்புக்களை காணலாம்.

03. இப் பகுதியில், தாரையின் சொல்வன்மை அதாவது மதிநுட்பம் புலப்படுமாற்றினை விளக்குக?

இப்பகுதியில் தாரையின் சொல்வன்மை, அதாவது தாரையின் மதிநுட்பம் வாய்ந்த உரையாடல் திறன் பற்றி கம்பர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். கடும் கோபத்துடன் கிஷ்கிந்தை வந்துள்ள இலக்குவனன் கோபத்தினை குறைத்து அவனுடன் உரையாடுவதற்காக, தாரை முதலிய வானர மகளிர் இலக்குவனனை சூழ்ந்து கொள்கின்றனர். அப்போது இலக்குவன் தன் வதனத்தை வேறு பக்கம் திருப்பி நிற்கின்றான். அவ்வேளை அழகிய தோளும், நீண்ட கண்களும், கொண்ட பூமியில் தெய்வப் பெண் போன்று விளங்கும் தாரை இலக்குவனனிடம் நடுக்கம் அடைந்தவளாகி பேசத் தொடங்கினாள். அவள் பேசும் போது இலக்குவனன் கோபத்தினை குறைக்கும் வகையில் மதிநுட்பத்துடன் இலக்குவனனை நோக்கி, வீரனே, அளவில்லாத காலம் வரை தவம் செய்தாலே உன்னுடைய வருகையானது இந்திரன் முதலிய தேவர்களுக்கும் வாய்க்கப்பெறும். ஆயினும் நாம் இன்று இயல்பாகவே அத்தன்மையை பெற்றோம். உன்னுடைய பாதங்கள் எங்கள் இருப்பிடத்தில் பதியப்பெற்றதால் நாம் இனிது வாழப்பெற்றோம். மேலும் தீவினையாகிய துன்பம் நீங்கிய நற்கதி கிடைக்கப்பெற்றவர்களானோம். இதைக் காட்டிலும் இவ்வுலகில் நாம் அடையக்கூடிய பேறு வேறு உண்டோ,? இவ்வாறு இசையிலும் இனிய சொற்களை பேசும் தாரை இலக்குவனனிடம் உரையாடினாள். இதனை,

" மைந்த நின் பாதம் கொண்டு
எம்மனைவரப் பெற்று வாழ்ந்தோம்
உய்த்தனம் வினையும் தீர்ந்தேம்
உறுதிவேறு இதனின் உண்டோ...

எனும் பாடலடிகள் இதனை எடுத்துக்காட்டுகின்றன.

மேலும் தாரை, ஐயனே நீ ஆணைச்சக்கரத்தை உடைய இராமனை சிறிது நேரமும் விட்டுப் பிரியாது அவனுடன் இருப்பவன். தற்போது கோபம் கொண்டு நீ விரைவாக இங்கு வருவதைக் கண்ட வானர வீரர்கள் அச்சம் அடைந்துள்ளனர். எனவே நீ இங்கு வருகை தந்ததன் காரணத்தை எடுத்துரைப்பாயாக? என இலக்குவனிடம் தாரை வினவி நின்றாள்.

" ஐய நீ ஆழிவேந்தன் அடிஇணை பிரிகிலாதாய்
எய்தியது என்னை என்றாள்...

இவ்வாறு தாரையின் மதிநுட்பம் வாய்ந்த சொல்வன்மை நயம் பற்றி கம்பர் அழகுற எடுத்துரைக்கின்றார்.

04. சுக்கிரீவன் நிலை கண்டு இராமன் அடைந்த கோபம் எவ்வாறு வெளிப்படுகின்றது? (இலக்குவனிடம் முறையிடும் தன்மை இராமன் இலக்குவனுடன் நடாத்திய ஆலோசனை)

கார்காலமாகிய நான்கு மாத காலம் நீங்கிய பின்னரும் சுக்கிரீவன் இராமனுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து இராமனுக்கு உதவி புரியும் எண்ணம் விடுத்து அந்தப்புரத்தில் மகிழ்ந்திருந்தான். இந் நிலை கண்ட இராமன் தன் மனதில் கோபம் கொண்டு பின்வரும் வார்த்தைகளை இலக்குவனனிடம் உரைக்கின்றார்.

யாவராலும் எளிதில் பெறுவதற்கு அரிய அரச செல்வத்தையும், நீண்ட காலம் பிரிந்திருந்த மனைவி உருமையும் நம் உதவியால் பெற்றான். அத் தன்மையை அவன் மறந்து விட்டான. மேலும் தன் நல்லொழுக்கதிலிருந்தும் நீங்கி அறநெறியை மறந்து விட்டான்.

" வறல் அரும் திருப்வற்று உதவிப் வருந்திறல் .
நினைத்திலன் சீர்மையின் தீர்ந்தனன்...

எனும் அடிகள் இதனை வெளிப்படுத்துகின்றன.

மேலும், நாம் அவனுக்கு செய்த உதவியை மறந்தான். அருமையான நம் நட்பினை வேரறுக்க முனைந்தான். யாவற்றிலும் மேம்பட்ட மெய்ம்மையை பொய்மையாக்கினான். தான் சொல்லிய சொற்படி நடவாது தான் அளித்த வாக்கினை பொய்யாக்கினான்.

" நன்றி கொன்று அருநட்பினை நூர் அறுத்து .
ஒன்று மெய்மை சிதைத்து உரை வாய்த்துவான்....

இது எனவாறு தெளிவுறுவதை காணலாம்.

மேலும், இராமன் இலக்குவனிடம் நம்முடைய வீரத்தையும் பேராற்றலையும் அறியாதவனாகி இன்ப வாழ்க்கை எனும் போகத்தில் அவன் மூழ்கிப் போயுள்ளான். அதாவது மாவீரம் பொருந்திய வலியவனான வாலியை தன் பாணம் கொண்டு வதைத்தவன் இராமன். அதனால் சுக்கிரீவன் துயரம் நீங்கியது. இழந்த அரசுரிமை மற்றும் மனைவியையும் கிடைக்கப்பெற்றான். இத்தகைய இராமன் ஆற்றல் வீரத்தைக் கண்டும் இன்னமும் சுக்கிரீவன் சொன்ன சொற்படி நடக்கவில்லையே என இராமன் உரைக்கின்றான். இது மட்டுமன்றி சுக்கிரீவன் சுகபோக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளான். எனவும் இராமன் கோபம் கொள்கிறான். அதாவது நீண்ட காலம் பிரிந்திருந்த தன் மனைவி உருமை மீண்டும் கிடைக்கப்பெற்றமையாலும், அரச சுகபோகங்கள் கிடைக்கப்பெற்றமையாலும் அவற்றில் மோகம் கொண்டு தான் அளித்த வாக்கினை மறந்து விட்டதாகவும் இராமன் உரைக்கின்றான்.

இவ்வாறு இராமன் சுக்கிரீவன் நிலை கண்டு கோபம் அடைந்தவனாகி இலக்குவனிடம் உரைக்கின்றான்.

05. இலக்குவனன் கிஷ்கிந்தை நோக்கி வருவதையும், அப்போது கிஷ்கிந்தையின் நிலையையும் கம்பர் எவ்வாறு விபரிக்கின்றார்?

தன் அண்ணன் இராமன் ஆணை ஏற்று கோபம் கொண்டு கிஷ்கிந்தை நோக்கி வந்த இலக்குவனனை கண்ட வானரங்கள் அச்சம் அடைந்து கிஷ்கிந்தை எனும் மலையை விட்டு நீங்கி அனைத்தும் ஒன்று சேர்ந்து காட்டுக்குள் சென்று மறைந்து கொள்கின்றன. இதனை, .

" வானரங்கள் வெருவி மலை ஓரீஇ கான் ஒருங்குபட ..

எனும் பாடலடி மூலம் அறியலாம்.

அப்போது அழகிய கிஷ்கிந்தையை விட்டு வானரங்கள் நீங்கியமையால் அவ்விடமே பொலிவிழந்து காணப்பட்டது. அதாவது நட்சத்திரங்கள் எல்லாம் நிறைந்து விளங்கிய வானம் அவை நீங்கிய பின் எவ்வாறு அழகற்று காணப்படுமோ. அது போல் கரிய மேகம் போன்ற கிஷ்கிந்தை மலையானது வானர வீரர்கள் நீங்கியமையால் பொலிவற்று காணப்பட்டது என கம்பர் அழகுற அக் காட்சியை காட்டுகிறார்.

06. இலக்குவனனை வழிமறிக்கும் வானர மகளிர் பற்றிய வர்ணனைச் சிறப்புக்கள் பற்றி எடுத்துரைக்க?

கிஷ்கிந்தை நோக்கி கோபத்துடன் வருகை தந்த இலக்குவனன் சினத்தை தணித்து அவனை சமாதானப் படுத்தும் நோக்கில் அனுமன் கூறிய உபாயத்திற்கமைய, வானர மகளிரில் சிறந்தவளாகிய தாரை ஆராய்ந்து எடுக்கப்பட்ட வளையல்களை அணிந்த அழகுடைய வானர மகளிர் உடன் வர இலக்குமனன் வரும் வழியில் குறுக்கிடுகின்றாள். அவ்வாறு இலக்குவனனை வழி மறிக்கும் வானர மகளிர் பற்றிய வர்ணனைகளை கம்பர் அழகுற வெளிப்படுத்தியுள்ளார்.

தாழ்ந்து தொங்கும் கூந்தலை உடைய தனது தோழியருடன் தாரை இலக்குவனன் வரும் வழியை மறித்து நின்றாள். அவ்வாறு நின்ற வானர மகளிர்,

மென்மையான இயல்பினையும், வெண்மையான பற்களையும், வெண்மையான வளையல்களையும், மிகச் சிறிய இடையினையும், உயர்ந்த இளமையான மென்மையான தனங்களையும், கொண்டவர்களாக நற்குடியில் பிறந்த மயில் போன்ற சாயலை உடையவர்களாக இலக்குவனனை தடுத்து நின்றனர்.

- “ விலங்கி மெல்லியல் வெள்நகை வெள்வளை
  இலங்கு நுண்ணிடை, ஏந்துஇள மென்முலை
  குலம்கொள் தோகை மகளிர் குழாத்தினால்
  வலம்கொள் வீரன் நெடுவழி மாற்றினாள்...

எனும் பாடல் மூலம் இத் தன்மையை காணலாம்.

மேலும், அவ்வாறு நின்ற வானர மகளிர், அணிந்திருந்த ஆபரணங்கள் விற்படை, வாட்படை போன்று நன்கு ஒளிக்கதிர்களை வீச கால்களில் அணிந்துள்ள சிலம்புப் பரல்கள் மென்மையாள ஓசையை இசைக்க, மேகலை எனும் இடையணி பறை போன்று முழக்கம் செய்ய, புருவங்கள் கொடிகளை போல் செறிந்து விளங்க அம் மகளிர் கூட்டம் இலக்குவனனை சூழ்ந்து கொண்டது.

“வில்லும் வாளும் அணிதொறும் மின்னிட
மெல் அரிக்குரல் மேகலை ஆர்த்து எழ
பல்வகைப் புருவக் கொடி பம்பிட..

இது மட்டுமன்றி, ஆரவாரம் செய்கின்ற பேரிகை போன்ற காற்சிலம்பு ஒலிக்க, வேல் போன்ற கண்களையும், வில் போன்ற புருவங்களையும் கொண்டவர்களாகி அவர்களின் அல்குல் பெரிய தேர் போல சுற்றி மேவும் படியாக இலக்குவனனை நெருங்கி அவனை வழிமறித்தனர்.

“ஆர்க்கும் நூபுரங்கள் பேரி
அல்குலாம் தடந்தேர் சுற்ற
வேற்கண் வில் புருவம் போர்ப்ப
மடைந்தையர் மிடைந்த போது..

இவ்வாறாக இலக்குவன் வரும் வழியில் தாரை தலமையிலான வானர மகளிர் குழாம் அவனை வழி மறிக்கும் காட்சிகளை நயம்பட கம்பர் அழகுற எடுத்தியும்புகிறார்.

07.தாரையின் தோற்றத்தைக் கண்ட இலக்குவன் நிலையினை தெளிவுறுத்துக.?

தன்னை நோக்கி இவ் உரைகளைக் கூறியது யார் என பார்ப்பதற்கு தன் முகத்தை திருப்பி தாரையை நோக்கினான். ஆங்கே குற்றமற்ற வெண்பிறைச் சந்திரன் நிலத்தில் பகல் வேளையில் வந்து தோன்றினால் எவ்வாறு ஒளி குறைந்து காட்சியளிக்குமோ அது போன்று முகத்தைக் கொண்டு தாரை விதவைக் கோலத்தில் அங்கே நின்றாள். இதனைக் கண்டதும் இலக்குவனனுக்கு தன் தாய்மாரும் இத்தகைய கோலத்தில் தானே இருப்பார்கள் என நினைத்து வருந்தினான்.

மேலும்,தனது கணவன் வாலி இறந்தமையால் மங்கல நாணை நீக்கி, அணிகலன்களை அணியாது, நறுமணம் பொருந்திய மலர்மாலைகளை சூடாது, குங்கமம், சந்தனம் முதலியவற்றை தன் உடலில் தரிக்காது, அங்கு நின்ற தாரையைக் கண்டதும் இலக்குவனனுக்கு தன் தாயாரின் நினைவு வருகின்றது. தன் தாய்மாரும் தன் தந்தை இறந்தமையால் இவ்வாறே காட்சியளிப்பர் என நினைத்து வருந்தினான். அதனை நினைக்கும் போது அவன் கண்களில் கண்ணீர் பெருகத்தொடங்கியது.

08. இலக்குவனனைத் தடுக்க அனுமன் தாரையிடம் கூறிய உபாயம் யாது?

கோபம் கொண்டு கிஷ்கிந்தை நோக்கி வரும் இலக்குவனனை தடுத்து அவனை சமாதானம் செய்யும் பொருட்டு வாயுவின் மைந்தனும், சூரியனும் மாணவனுமாகிய அனுமன் வானர மகளிரில் சிறந்த தாரையிடம் பின்வரும் உபாயத்தினை உரைக்கின்றான்.

தாயே, தாங்கள் ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்த அழகு கொண்டு விளங்கும் வானர மகளிர் சிலருடன் இலக்குவனன் வரும் நீண்ட வழியை குறிக்கிட்டால் சிந்தித்து செயல் ஆற்றும் இலக்குவன் பெண்கள் நிற்கும் வழியில் செல்வதை விரும்பமாட்டான். அப்போது அவன் கோபம் தணியும். பின் அவனிடம் சமாதானமாக உரையாட முடியும். என அனுமன் தாரையிடம் உரைக்கின்றான்.

" அனை, எதிர்ந்து இவண் ஆய்வளையரோடும்
மனையின் வாயில் வழியினை மாற்றினால்
நினையும் வீரன் அந் நீள் நெறி நோக்கலான்
வினையம் ஈது என்று அனுமன் விளம்பினான்...

அதாவது பிற பெண்களை தன் தாய் போன்று கருதும் இலக்குவன் தாரையைக் கண்டதும் நிச்சயம் அவன் கோபம் நீங்கும் என்பது அனுமனின் ஊகம். மேலும் இலக்குவனன் கோபத்தை வானர வீரர்கள் எவராலும் அந் நேரத்தில் தணியச் செய்ய முடியாது என்பதானாலும் தாரையின் மூலமே இலக்குவன் கோபம் தணியும் எனக் கூறிய அஞ்சனை மைந்தன் அனுமனின் நல் உபாயம் இறுதியில் வெற்றியளித்தமையையும் நாம் காணலாம்.

09. கிஷ்கிந்தைப்படலத்தில் பயின்றுள்ள உவமையினின் வெளிப்பாடு பற்றி எழுதுகுறைக்க.?

✪ நட்சத்திரங்கள் நீங்கிய வானம் போன்று வானரங்கள் நீங்கிய கிஷ்கிந்தை காணப்பட்டது.

- ☞ உவமானம் – நட்சத்திரம் நிறைந்திருந்த வானம் நட்சத்திரம் மறைந்த பின் தோன்றுதல்
- ☞ உவமேயம் – வானரங்கள் நீங்கிய பின் பொலிவற்று விளங்கிய கிஷ்கிந்தை மலை.
- ☞ பொதுத்தன்மை – பொலிவிழத்தல், அழகு அற்றுப் போதல்

✪ இலக்குவனன், கயிற்றினை கொண்டிருக்கும் யானை போன்ற வீரமுடையவன், கட்டுப்பாடுடையவன்.

- ☞ உவமானம் – கயிற்றினை கொண்ட யானை
- ☞ உவமேயம் – வீரம் மிகுந்த இலக்குவன்
- ☞ பொதுத்தன்மை – வீரம், கட்டுப்பாடு

✪ வானர மகளிர் புருவங்கள் கொடிகள் போன்று விளங்கியமை.

- ☞ உவமானம் – கொடிகள்
- ☞ உவமேயம் – வானர மகளீர் புருவங்கள்
- ☞ பொதுத்தன்மை – அழகு

✪ வானர மகளிர் காற்சிலம்புகள் பேரிகை போன்று ஒலித்தல்

- ☞ உவமானம் – ஒலி செய்யும் பேரிகை
- ☞ உவமேயம் – காற்சிலம்பு
- ☞ பொதுத்தன்மை – பேரொலி, சத்தம்

✪ வானர மகளிர் வேல் போன்ற கண்களையும், வில் போன்ற புருவங்களையும் கொண்டவர்கள்

- ☞ உவமானம் – வேல், வில்
- ☞ உவமேயம் – வானர மகளீர் கண்கள், புருவங்கள்
- ☞ பொதுத்தன்மை – கூர்மை, வளைவு

✪ வெண்மையான முழு நிலவு பகல் பொழுதில் ஒளி குறைந்து விளங்குவதைப் போல தாரையின் முகம் காணப்பட்டது.

- ☞ உவமானம் – பகலில் வானில் தோன்றிய முழுநிலா
- ☞ உவமேயம் – தாரையின் முகம்
- ☞ பொதுத்தன்மை – மங்கிய அழகு

விவேகசிந்தாமணி

→ நாயக்கர் காலத்தில் எழுந்த ஓர் பல்சுவை சார்ந்த இலக்கியம் இதுவாகும்.
→ பெண்களின் அழகினை அதீத கற்பனையோடு வர்ணித்துள்ள பாடல்கள்
→ இப் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவையாவன,
1. தேனுகர் வண்டு மது தனை..
2. தண்டுலாவிய தாமரை..
3. அலகு வாள்வழி ஆயிழை..

01. ஓ குறு வினா – விடை

01. " தான் அதைச் சம்புவின் கனி என்று
தடங்கையில் எடுத்து முன் பார்த்தாள்...

அ. இங்கு சம்பு என்பதன் பொருள் யாது?

✸ நாவல் பழம்

ஆ. தடங்கை என்பதன் கருத்து யாது?

✸ நீண்ட கைகள், விசாலமான கரங்கள்

02. " வான்உறு மதியம் வந்தது என்று எண்ணி
மலர்க்கரம் குவியுமென்று அஞ்சி...

அ. மதியம் என்பதன் கருத்து யாது?

✸ சந்திரன்

ஆ. மலர்கரம் என்பதில் உள்ள அணி யாது?

✸ உவமை – தாமரை மலர் போன்ற கை

03. " தண்டு உலாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகந்தருகு ஏந்தினாள்...

அ. மேற்படி பாடல் இடம்பெற்றுள்ள இலக்கியம் எது?

✸ விவேக சிந்தாமணி

ஆ. தடாகம் என்பதற்கு வழங்கப்படும் வேறு சொல் யாது?

✸ பொய்கை, குளம்

04. " அலகு வாள் விழி யாயிழை நன்னுதல்
திலகங் கண்டெதிர் செஞ்சிலை மாரனும்...

அ. மங்கையின் அழகுச் சிறப்பினை குறிப்பிடுக?

✸ கூர்மையான வாள் போன்ற விழிகளையும், ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்தவள், அழகிய நெற்றியை உடையவள்

ஆ. செஞ்சிலை மாரன் எனப்படுபவன் யார்?

✸ மன்மதன்

05. " கலகமே செய்யும் கண் இதுவாமென
மலரம்பைந்தையும் வைத்து வணங்கினான்...

அ. கலகமே செய்யும் கண் இது என்பதன் விளக்கம் யாது?

✹ குழப்பத்தை உண்டாக்கும் வல்லமை கொண்ட கண்கள்

ஆ. மலரம்பு ஐந்தும் எவை?

✹ முல்லை, அசோகு, நீலோற்பவம், மா, தாமரை

02. விவேகசிந்தாமணியில், தேன் நுகர் வண்டு மதுதனை உண்டு...எனும் பாடலில் கவிஞரின் கற்பனைத்திறன் பற்றிய வெளிப்பாடு யாது?

பூக்களில் தேனை உண்டு மயங்கிக் கிடந்தன வண்டுகள். அவற்றைக் கண்ட பெண் அதை நாவற்பழம் என கருதி அதைத் தன் நீண்ட கையில் எடுத்துப் பார்த்தாள்.

" தேன் நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான் அதைச் சம்புவின் கனி என்று
தடங்கையில் எடுத்த முன் பார்த்தாள்..

அதாவது வண்டு நாவற்கனி போன்று காட்சியளித்தது என்பது கவிஞரின் கற்பனையாகும்.

மேலும், அம் மங்கையின் முகத்தின் அழகினைக் கண்ட வண்டு அது வானில் உலாவரும் சந்திரனுக்கு ஒப்பானது எனக் கருதி அவளது மலராகிய கை குவிந்து மூடிக்கொள்ளும் என எண்ணி பயந்து அவ் வண்டானது பறந்து போனது.

" வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி
மலர்க்கரம் குவியுமென்று அஞ்சிப் போனது. ..

அதாவது மங்கையின் கரம் மலராக மூடிக்கொண்டால் தான் அதற்குள் அகப்பட்டு விடுவேன் எனக் கருதிய வண்டு பறந்து போனது என்பதும் கவிஞரின் கற்பனையே. மேலும், அவ்வாறு பறந்தது வண்டோ, அல்லது பழமோ என மங்கையானவள் மயங்கி நின்றாளாம். இதுவும் கவிஞரின் மிகையான கற்பனையின் வெளிப்பாடே.

03. விவேகசிந்தாமணியில், பின்வரும் பாடல்களில் மங்கையின் கண் அழகு வர்ணிக்கப்படும் தன்மையினை விளக்குக.?

<u>அ. தண்டு உலாவிய தாமரைப் பொய்கையில்...</u>

இப்பாடலில் மங்கையானவள் தாமரைப் பொய்கையில் உள்ள தண்ணீரை தன் கையில் ஏந்தி தன் முகத்தருகே கொண்டு வந்து பார்த்தாள். அதில் தெரிந்த தன் கண்களின் நிழலைப் பார்த்து கெண்டை மீன், கெண்டை மீன் எனக் கூறி தரை ஏகினாள்.

" தண்டு உலாவிய தாரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகந்தருகு ஏந்தினாள்.
கெண்டை கெண்டை எனக் கரை ஏறினாள்..

அதாவது, மங்கையின் கண்கள் கெண்டை மீன் போன்றனவாம். கெண்டை மீன் என்பது நீர் நிலையில் காணப்படும் ஒரு வகை மீனாகும். அம் மீன் மங்கையின் கண்களுக்கு உவமிக்கப்பட்டுள்ளது. அதாவது மீன் போல் மங்கையின் கண்களும் தோற்றமளித்தனவாம். மங்கை தன் கண்களின் விம்பத்தை/நிழலை நீரில் கண்டு அதனை உண்மையில் கெண்டை மீன் எனக் கருதி கரையேறினாள் என கவிஞர் மங்கையின் கண் அழகினை கற்பனை நயத்துடன் வர்ணிக்கின்றார்.

<u>ஆ. அலகு வாள்விழி ஆயிழை நன்னுதல்...</u>

இப்பாடலில் மங்கையின் கண் அழகு இருவிதமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. கூர்மையான வாளைப் போன்ற விழிகளை உடையவள் என்பது முதலாவதாகும். இரண்டாவது, மங்கையின் அக் கண்கள் கலகத்தை அதாவது குழப்பத்தை விளைவிக்கக்கூடிய கண்கள் எனக் கருதிய காமதேவனாம் மன்மதன் தன் மலரம்புகள் ஐந்தையும் அவள் முன் வைத்து வணங்கினான். இதனை,

“ செஞ்சிலை மாரனும் கலகமே செய்யும்
கண்இதுவாம் என மலரம்பு
ஐந்தையும் வைத்து வணங்கினான்…

எனும் பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன. அதாவது, மங்கையின் கண்களைக் கண்டு மன்மதனே இக் கண்கள் கலகத்தை செய்யக் கூடியன எனக் கருதி தன் கரும்பு வில்லையும், மலரம்புகளையும் அவள் முன் வைத்து வணங்கினான் எனக் கவிஞர் கூறுவது அதீத கற்பனையாகும்.

04. அலகு வாள்விழி ஆயிடை நண்ணுதல்.. எனும் பாடலில் மன்மதன் மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான் என்பதில் உள்ள சிறப்பினை விளக்குக.?

வாள் போன்று ஒளி வீசும் கண்களையுடைய மங்கையின் நல்ல நெற்றியில் உள்ள திலகத்தின் பொட்டு, அழகினை பார்த்த மன்மதன் அவளது கண்கள் தன் மலர் அம்புகளை விட கலகத்தை உண்டாக்க வல்லன எனக் கருதி தன் கையில் உள்ள மலரம்புகள் ஐந்தையும் அவள் முன் வைத்து வணங்கினான்.

அதாவது மன்மதன் கரும்பு வில்லைக் கொண்டிருப்பவன். அவனிடத்தில் முல்லை, அசோகம், தாமரை, மா, நீலோற்பலம் எனும் ஐந்து மலர் கணைகள் காணப்படும். அவற்றை கொண்டு உயிர்களிடத்தில் காதல், மற்றும் காமத்தை ஏற்படுத்தக் கூடிய வல்லமை கொண்டவன் மன்மதன். அதாவது கலகத்தை (இன்பப்போர்) விளைவிக்கக் கூடியவன் அவன். ஆயினும் இங்கு மங்கையின் கண்கள் அவ் மலரம்புகளை விட கலகத்தை ஏற்படுத்த வல்லமை கொண்டிருப்பதை கண்ட மன்மதன் தன் மலரம்பு ஐந்தையும் அவள் முன் வைத்து வணங்கினான் என்பது இதன் சிறப்பாகும்.

“ செஞ்சிலை மாரனும் கலகமே செய்யும்
கண்இதுவாம் என மலரம்பு
ஐந்தையும் வைத்து வணங்கினான்…

என்பது பாடலடிகளாகும்.

05. விவேக சிந்தாமணியில் தரப்பட்ட பாடல்களில் அணி வெளிப்பாடு பற்றி எடுத்துரைக்க.?

✷ உவமையணிகள்

- வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி..

  உவமானம் – வானில் தோன்றிய சந்திரன்
  உவமேயம் – மங்கையின் முகம்
  பொதுத்தன்மை – அழகு

- அலகு வாள்விழி – வாள் போன்ற கூர்மையான கண்களையுடைய பெண்

  உவமானம் – வாள்
  உவமேயம் – மங்கையின் கண்
  பொதுத்தன்மை – கூர்மை

- மலர்க்கரம் (உருவக அணி).. மங்கையின் கை மலராக உருவகிக்கப்பட்டுள்ளது.

மலர்க்கரம் என்பது மலர் போன்ற கரம் என உவமை அணியாக பொருந்தினாலும் இப் பாடலில் கவிஞர் மங்கையின் கரங்களை மலராக உருவகம் செய்துள்ளார்.

உரிமையும் கடமையும்
அலகு 08

01. கட்டுரையின் ஆசிரியர் யார்?

→ டாக்டர் மு. வரதராசன்

02. அன்பின் வழியது உயிர் நிலை.. எனக் கூறும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?

→ திருக்குறள் – திருவள்ளுவர்

03. அன்பு இல்லாத வாழ்வை வள்ளுவர் எதற்கு ஒப்பிடுகின்றார்?

→ பாலை நிலத்தில் உள்ள பட்ட மரம் போன்றது.

04. இல்லறம் ஒன்றின் அங்கங்கள் எவை?

→ மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல்

05. உரிமையை மிகுதியாக கருதி கடமையைப் புறக்கணிக்கும் போது நிகழும் குழப்பங்கள் எவை?

→ குடும்பத்தில் போராட்டம் ஆரம்பிக்கும்
→ கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படும்
→ மக்கள் ஒழுக்கத்திலிருந்து தவறுவர்
→ காதல், கற்பு முதலியவற்றிற்கு களங்கம் உண்டாகும்

06. உரிமையும், கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் எனும் கருத்து எவ்வாறு கட்டுரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது?

→ நாணயம் என்பது இரு பக்கங்களைக் கொண்டது. ஒரு பக்கம் மட்டும் கொண்டதாக நாணயம் இருக்காது. இக் கட்டுரையில் நாணயத்தின் இருபக்கங்கள் உரிமை மற்றும் கடமை இணைந்தது என்கின்றார் கட்டுரையாசிரியர். குறிப்பாக உரிமையும் கடமையும் சம அளவில் இருக்க வேண்டும். நாம் உரிமையை மட்டும் அதிகமாக விரும்பி கடமையை புறக்கணித்தல் கூடாது. அவ்வாறு செய்தால் குழப்பமே உண்டாகும். அது போல கடமையை சரியாகச் செய்பவரே உரிமையை அனுபவிக்கும் தகுதி உடையவர் என்பது கட்டுரையாசிரியரின் கருத்து.

→ மேலும் உரிமை இல்லாத வாழ்வும் உயிரற்ற வாழ்வு போன்றதாகும். கடமையைப் போன்று சம அளவில் பேணப்பட வேண்டியது உரிமை. பலரும் உரிமையைப் பற்றி பேசுகின்ற போதிலும் அவர்கள் கடமையை சரிவரச் செய்வது மிகக் குறைவே. ஆக இவ்விரண்டும் சம அளவில் இருக்கும் போது வாழ்க்கை முழுமை பெறும் ஆகவே உரிமையும் கடமையும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்கின்றார் ஆசிரியர்.

→ உரிமை மற்றும் கடமை ஆகிய இரண்டையும் சம அளவில் பேணிட உதவிடும் கருவியாக அன்பு விளங்குகின்றது. அன்பு செலுத்துவதன் வாயிலாக உரிமை மற்றும் கடமையில் சம அளவில் கவனம் செலுத்திட முடியும் என்கின்றார் ஆசிரியர்.

→ ஆகவே வாழ்வில் உரிமையையும் கடமையையும் சம நோக்கில் கடைப் பிடித்திட வேண்டும் மாறாக ஒன்றை உயர்த்தி மற்றையதை குறைவாகக் காண்பது நன்மை தராது என்பது கட்டுரையாசிரியரின் கருத்தாகும்.

07. இக் கட்டுரையில் உரிமை, கடமை, அன்பு ஆகியவற்றிற்கு இடையிலே உள்ள தொடர்பினை கட்டுரையின் ஊடாக விளக்குக?

→ உரிமை, கடமை, அன்பு ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கிய தொடர்பினை கொண்டிருப்பவையாகும். ஏனெனில் உரிமை மற்றும் கடமை ஆகிய இரண்டையும் பலப்படுத்தும் பாலமாக விளங்குவது..அன்பாகும்.

→ நாம் வாழ்வதற்கு உரிமை இன்றியமையாதது. உரிமை இல்லாத வாழ்வு உயிரற்ற வாழ்வைப் போன்றது. அதற்காக உரிமை உள்ளது என்று மனம் போன போக்கில் வாழ முடியாது. உரிமையோடு சேர்ந்து நமக்கான கடமையினையும் நாம் ஆற்ற வேண்டும். கடமையை செய்வதற்கு உரிமையே துணையாக அமைகின்றது. ஆக இவ் இரண்டையும் சம அளவில் பேணச் செய்வது அன்பு என்கின்றார் ஆசிரியர்.

→ உரிமையை உயர்வாகக் கருதி கடமையை புறக்கணித்தால் அவ்விடத்தில் குழப்பம் மற்றும் முரண்பாடுகள் தலை தூக்கும். ஆனால் அதை சீர்ப்படுத்தும் ஆயுதமாக அன்பு விளங்குகின்றது. அன்பின் துணையினால் எதனையும் சாதிக்க முடியும் என்பது இதன் மூலம் புலனாகின்றது.

→ அன்பு உயர்வாக இருக்கும் இடத்தல் உரிமைக்கான போராட்டம் இல்லை எனவும், கடமைக்கான தேவையும் குறைவாகவே காணப்படும் என்கின்றார் ஆசிரியர்.

08. கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விபரிக்குக?

அ. குடும்பத்தில் தந்தையின் உரிமை மற்றும் கடமைகள்

ஆ. மகனின் உரிமை மற்றும் கடமை

இ. அலுவலகத்தில் பணிபுரிவோரின் உரிமை மற்றும் கடமை

விடைகள்

அ. குடும்பத்தில் தந்தைக்கு, பொருள் வருவாய்க்கு ஏற்றவாறு உழைத்தல், குடும்பத்தில் முடிவெடுத்தல் மற்றும் குடும்பத்தை காப்பாற்றுதல் என்பன கடமைகளாகும்

ஆ. மகனது கடமைகளாக, பெற்றோருக்கு கட்டுப்பட்டு நடத்தல், ஆசிரியர்க்கு கீழ்ப் பணிந்து கற்றல்

இ. ஊதியம் பெறுதல், விடுமுறை பெறுதல், மருத்துவ வசதி என்பன் உரிமைகளாகும். கடமைகளாக உரிய தொழிலை கடமை உணர்வுடன் நிறைவேற்றுதல்.

●●●●●●●

எலியம் – சிறுகதை
அலகு 09

01. எலியம் எனும் சிறுகதையின் ஆசிரியர் யார்?

- உமா வரதராஜன்

02. முதலில் செய்ய வேண்டிய காரியத்தை கடைசியில் செய்திருக்கின்றோம்.

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

- லோரன்ஸ் கதையாசிரியருக்கு

03. இன்றைக்கு இரவைக்கு பாருங்கள் முசுப்பாத்தியை..

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

- கதையாசியரால் லோரன்சுக்கு

ஆ. முசுப்பாத்தி என்பதால் யாது புலப்படுகின்றது?

- வேடிக்கை, நகைச்சுவையான சம்பவம், மகிழ்ச்சியான சம்பவம்

04. முதலில் செய்திருக்க வேண்டிய காரியம் என கூறப்பட்டது எது?

சுற்றுச் சுழலை சுத்தமாக வைத்திருந்திருக்க வேண்டும் என்பது முதலில் செய்திருக்க வேண்டிய காரியம் எனக் கூறப்பட்டது. அதாவது சுற்றுச் சுழல் சுத்தமாக இருந்தால் எலி முதலியவற்றால் தொல்லைகள் ஏற்பட்டிருக்காது. கதையில் சுற்றுச் சுழலை முதலில் சுத்தம் செய்யாமல் எலிகளை அழிக்கும் முயற்சி முதலில் முன்னெடுக்கப்படுகின்றது. அது தோல்வியில் முடியவே இறுதியில் சுற்றுச் சுழலை சுத்தம் செய்கின்றனர். வீட்டிற்கு அருகில் உள்ள பற்றைகள், புற்கள், கழிவுப் பொருட்கள் என்பவற்றை அப்புறப்படுத்தி சுழலை சுத்தம் செய்கின்றார். இதனை முதலில் செய்திருந்தால் எலியினால் தொல்லைகள் ஏற்பட்டிருக்காது என்பது கட்டுரையில் புலப்படுகின்றது.

05. எலியம் எனும் சிறுகதையில் வெளிப்படும் அங்கதச் சுவை (நகைச் சுவை உணர்வு) பற்றி எடுத்துரைக்குக?

எலியம் எனும் இச் சிறுகதை நகைச் சுவை உணர்வு இழையோடுவதாக படைக்கப்பட்டுள்ளது. கதையின் பல இடங்களில் அங்கதச் சுவை துள்ளுவதை காணலாம். எலி ஒன்றினை மையமாக வைத்துக் கொண்டு அது சார்ந்த ஒரு கையாடலை நகைச்சுவை உணர்வுடன் கூறியிருப்பது ஆசிரியரின் ஆளுமையாகும்.

→ எலிகளைப் பிடிக்காத ஒருவன் தன்னுடைய உயிரியல் பயிற்சிக்காக எலிகளை வெட்டி ஆராயும் முறை எனக் கூறுவது நகைச்சுவை உணர்வாக அமைகின்றது.

→ தான் வாங்கி வைத்த புதிய மணச் சவர்க்காரத்தை எலியானது தன் மனைவி எலிசாவுக்கு கொடுப்பதற்காக திருடிக் கொண்டு போய்விட்டது எனக் கூறுதல்

→ கதையில் வரும் நபர் கட்டிலில் இருக்கும் போது எலி ஒன்று தொப்பென்று விழுந்து அவன் கால்களின் வழியாக கடக்க முற்படுகையில் அவன் கால்களை உதறி கட்டிலின் மேல் ஏறி துள்ளிக் குதிக்க கட்டிலின் குறுக்குப் பலகை முறிகின்றது. தச்சன் கட்டிலை படுப்பதற்கு மட்டுமன்றி இவ்விதமாக துள்ளிக் குதிப்பதற்கும் கட்டிலை செய்திருக்கலாம் எள ஆசிரியர் அங்கதச் சுவை பட கூறுகின்றார்

→ எலிப் பொறியில் வைத்த கருவாட்டுத் துண்டினை எலிகள் உண்ணவில்லை என்பதைக் கண்டதும் எலிகள் எல்லாம் சைவத்திற்கு மாறிவிட்டனவா? என கதையாசிரியர் எண்ணிக் கொள்வது நகைச்சுவை உணர்வினை ஊட்டுகின்றது.

→ வீட்டு வளவின் மூலையில் குப்புறக் கிடந்த கார் பற்றிக் கூறுவதும் ஓர் அங்கதச் சுவையாகும். இந்த நாடு இறக்குமதி செய்த முதல் நூறு கார்களில் இதுவும் ஒன்றாக இருந்திருக்கலாம் எனக் கூறுதல்

→ எலிப் பொறியில் அகப்பட்டு இறந்து போன எலியைக் கண்டதும் மகிழ்ச்சியடைவதும் நகைச்சுவை உணர்வின் வெளிப்பாடேயாகும். இறந்த எலிகளைக் கண்டு, சண்டையிடும் நாய்களின் வாய் பிளந்து மேலுதடு விரிந்து பற்கள் தெரியும் தோற்றம் எனக் கூறுதல்.

→ கதையாசிரியரின் விருப்பத்துக்குரிய சட்டை ஒன்றை எலி குதறி விட்டுப் போனதும் வரைபடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியா கண்டத்தை ஞாபகப்படுத்தும் வகையில் சட்டையின் கிழிசல் இருந்தது எனக் கூறுவதும் ஓர் எள்ளல் சுவையாகும்.

→ எலிகளை அழிப்பதற்கு பூனை ஒன்றை வளர்ப்பதும் அதற்கு ஆங்கிலத்தில் பெயர் வைத்ததும் அதற்கான காரணமாக தமிழ்ப் பெயர்கள் ஏனோ சொல்லப் பிராணிகளுக்கு பொருந்துவதில்லை எனக் கூறுவதும் அங்கதச் சுவையாகும்

→ கறிச்சட்டியில் இருந்த கறி முழுவதையும் பூனை காலி செய்து விட்டு திருப்தியுடன் இவனை நிமிர்ந்து பார்த்து மியாவ் எனக் கத்தியதும், கோபத்துடன் இவன் பூனையை அடித்து துரத்துவதும் என இவையும் அங்கதச் சுவையின் வெளிப்பாடேயாகும்.

06. கதையாசிரியரின் மொழிநடைச் சிறப்புக்களை குறிப்பிடுக?

எலியம் எனும் இச் சிறுகதையாசிரியரின் மொழி நடைச் சிறப்பினை பின்வருமாறு நோக்கலாம்.

→ பிரதேச மண்வாசனை கதையில் பல இடங்களில் இடம்பெறுதல்

→ கதையாசிரியர் தானே கதை சொல்லியாக இடம்பெற்றிருத்தல்

→ நகைச் சுவை உணர்வினை பல இடங்களில் வெளிப்படுத்தியிருத்தல்

→ தமிழ் மொழிச் சொற்களுடன் ஆங்கில மொழிச் சொற்கள் மற்றும் வட மொழிச் சொற்களையும் இணைத்திருத்தல்

→ உரையாடல் சார்ந்த கருத்துக்கள் சிறுகதையில் இடம்பெற்றிருத்தல்

→ இலகுவான சொல்லாட்சியுடன் யாவரும் புரிந்து கொள்ளும் படியான மொழிநடை

07. பின்வரும் தொடர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களை விளக்குக?

✈ **கர்ணனுக்கு கிடைத்த நாகாஸ்திரத்தை ஒத்த எலிப்பொறி**

கர்ணனுக்கு நாகஸ்திரம் எனும் சக்தி வாய்ந்த ஓர் அஸ்திரம் கிடைக்கப் பெற்றிருந்தது. அதைக் கொண்டு தன் எதிரியான அர்ச்சுனனைக் கொல்வதற்கு காத்திருந்தான். அது போல கதையாசிரியருக்கு தன் எதிரியான எலிகளை அழிப்பதற்கு எலிப்பொறி எனும் ஒன்று உதவியாக இருந்தது. ஆகவே தான் கர்ணனுக்கு கிடைத்த நாகாஸ்திரத்தைப் போன்று எலிப்பொறியும் கதையாசிரியருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது.

✈ **மறுபடியும் பொறி கருவாட்டுத் துண்டு வைத்து நாணேற்றப்பட்டது**

நாணேற்றுதல் என்பது வில்லில் பிணைக்கப்படுவதாகும். அதாவது வில்லில் உள்ள நாணில் அம்பினை வைத்து இலக்கை நோக்கி எய்வதற்கு தயாரான நிலையை நாணேற்றல் எனலாம். அது போல கதையாசிரியரும் எலிப்பொறியில் கருவாட்டுத் துண்டை பொருத்தி எலிகளைக் கொல்வதற்கு அதை தயார்ப்படுத்துகின்றார்.

திருக்குறள் - நலம் புனைந்து உரைத்தல்

அலகு 10

01. சுருக்கமான வினா விடை எழுதுதல்

1. " அனிச்சமே நின்னினும் மென்னீரள் யாம் வீழ்பவள்...

அ. யாம் வீழ்பவள் என்பதன் கருத்து யாது?

- **எம்மால் விரும்பப்பட்டவள்**

ஆ. அனிச்சம் என்பது குறிப்பது யாது?

- **அனிச்சம் பூ**

2. " மையாத்தி நெஞ்சே இவள்கண் பலர் காணும்
பூவொக்கும் என்று...

அ. மையாத்தி என்பதன் பொருள் யாது?

- **மயங்கி நிற்றல்**

ஆ. இங்குபலர் காணும் பூக்கள் எவை?

- **தாமரை, குவளை, நீலம்**

3. " அனிச்சப் பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படா பறை..

அ. கால்களையாள் என்பதன் கருத்து யாது?

- **காம்பு நீக்கமால்**

ஆ. நுசும்பு என்பதன் பொருள் யாது?

- **இடை, இடுப்பு**

www.ikeda.lk

4. " மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்...

அ. மீன், மதி என்பவற்றின் பொருள் யாவை?

- **மீன் – நட்சத்திரம்**
- **மதி – சந்திரன்**

ஆ. நட்சத்திரங்கள் கலக்கமடையக் காரணம் யாது?

- **நிலவையும், பெண்ணையும் கண்டு கண்டு எது சந்திரன் எது பெண் என அறிந்துகொள்ள முடியாது கலங்கின.**

5. " அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறு உண்டோ மாதர் முகத்து...

அ. சந்திரனிடம் இருப்பது எது?

- **கறை, களங்கம்**

ஆ. அவிர்மதி என்பதன் கருத்து?

- **ஒளிவீசும் சந்திரன்**

6. " அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு
நெருஞ்சிப் பழம்...

அ. தூவி என்பதன் கருத்து யாது?

- **இறகு, இறக்கை**

ஆ. பெண்ணின் பாதத்தின் மென்மைச் சிறப்பு எவ்வாறு வெளிப்படுகின்றது?

- **அனிச்சம்பூவும், அன்னத்தின் இறகும் அப் பெண்ணின் பாதத்திற்கு நெருஞ்சி முள் போல் வருத்தம் கொடுக்கின்றன.**

www.lkedu.lk

02. நலன்புனைந்து உரைத்தல் அதிகாரத்தில், மலர்களையும், மதியையும் ஒப்பிட்டு தலைவன் தலைவியின் அழகு நலனை எவ்வாறு புனைந்துரைக்கின்றான்.?

❁ மலர்களை ஒப்பிட்டு...

❍ அனிச்சம் பூவுடன் ஒப்பிடுதல் – மென்மையான தன்மை கொண்டிருப்பதால் பூக்கள் அனைத்திலும் சிறந்து விளங்குவது அனிச்சம் பூ. ஆயினும் தன்னால் விரும்பப்படும் தலைவி அவ் பூவை காட்டிலும் மென்மையானவள் என தலைவன் கூறுகிறான்.

" அனிச்சமே யாம் வீழ்பவள் நின்னினும் மென்னீரள்..

❍ மேலும் தலைவியின் கண்கள் பலராலும் காணப்பெறும் பூக்களாகிய தாமரை, குவளை, நீலம் என்பவற்றை ஒத்துருக்கின்றன எனவும் தலைவன் கூறுகிறான்.

" இவள்கண் பலர் காணும் பூ ஒக்கும்..

❍ குவளை மலர்கள் காணும் இயல்பினை கொண்டிருந்தால் தன் தலைவியின் கண் அழகிற்கு தாம் ஒப்பாக மாட்டோம் எனக் கருதி அவை நாணமடையுமாம்.

" காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்..

❍ இதுமட்டுமன்றி, அனிச்சம் பூவினை காம்பு களையாது அவள் தம் கூந்தலில் சூடினால் அதன் பாரம் தாங்காது அவளது இடையானது ஒடித்துவிடும் என தலைவன் மிகையான உரைக்கின்றான்.

" அனிச்சம் பூக் கால்களையான் பெய்தாள் நுசும்பிற்கு..

❍ மேலும், அனிச்சம் பூவானது அவளது மென்மையான பாதத்தில் பட்டால் அது நெருஞ்சி முள் போன்று வருத்தத்தை அளிக்குமாம்.

இவ்வாறு மலர்களை ஒப்பிட்டு தன் தலைவியின் அழகினை பலவாறாக தலைவன் புனைந்துரைக்கின்றான்.

❁ மதியினை ஒப்பிட்டு...

❍ வானில் தோன்றும் சந்திரனுக்கும் தன் தலைவியின் முகத்திற்கும் வேறுபாடு அறியாமல் நட்சத்திரங்கள் எல்லாம் கலங்கி நிற்கின்றனவாம். அதாவது சந்திரனை போன்ற வதனம் தன் தலைவியுடையது என தலைவன் உரைக்கின்றான்.

" மதியும் மடந்தை முகனும் அறியா பதியின் கலங்கிய மீன்..

❍ மேலும், குறைந்த இடமெல்லாம் நிறைவான ஒளிவீசும் இயல்புடைய சந்திரனித்தில் களங்கமானது இருப்பதை போன்று தன் தலைவியின் முகத்தில் எதுவித களங்கமும் இல்லை என தலைவன் கூறுகின்றான்.

" அவிர்மதிக்கு போல மறுவுண்டோ மாதர் முகத்து..

❍ இதுமட்டுமன்றி, தன் தலைவியின் முகத்தை போல் ஒளிவீச முடியுமானால் நீயும் என் காதலுக்கு உரிமை பெறுவாய் என தலைவன் கூறுவதன் ஊடாக தன் தலைவியின் வதனம் சந்திரனைக் காட்டிலும் ஒளிபொருந்தியது என உரைக்கின்றான்.

" மாதர் முகம் போல ஒளிவிட வல்லையேல் காதலை..

❍ மேலும், மலர்போன்ற கண்களை உடைய தன் தலைவியின் முகத்தை நீயும் பெற விரும்பினால் பலர்காணும் படி தோன்றாதிருப்பாயாக என தலைவன் கூறுவதன் தன்மையை நோக்கும் போது வானில் சந்திரன் பலரும் படி காட்சியளிப்பதனால் அதன் அழகு குறைந்தது எனவும்தன் தலைவியின் அழகு சந்திரனை காட்டிலும் மிகுதியானது என தலைவன் மறைமுகமாக உரைக்கின்றான்.

" மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்ததாயின் பலர் காணத் தோன்றல்..

இவ்வாறு மதியை ஒப்பிட்டு தன் தலைவியின் அழகு நலன்களை தலைவன் நயந்துரைக்கின்றான்.

03. இப் பகுதியில் தலைவியின் ஏனைய அழகு நலன்களை தலைவன் புனைந்துரைக்கும் தன்மையினைக் குறிப்பிடுக?

தலைவியின் அழகு புனைந்துரைக்கப்படும் தன்மையினை நோக்குவோமாயின்,

- முங்கிலை போன்ற தோள்களை கொண்டவள்
- தளிர் நிறம் கொண்ட மென்மையான உடலை உடையவள்.
- முத்துப் போன்ற பற்களை கொண்டவள்
- மை பூசப்பட்ட வேல் போன்ற கண்களை உடையவள்
- அனிச்சம் பூவும், அன்னத்தின் இறகும் இவளது பாதத்தில் பட்டால் அது நெருஞ்சி முள் போல வருத்தத்தை கொடுக்கும் மென்மையான பாதங்களை உடையவள்.

இவ்வாறு நலம் புனைந்துரைத்தல் எனும் அதிகாரத்தில் தலைவியின் அழகுச் சிறப்புக்களை அழகுற நாம் தொகுத்து நோக்கலாம்.

04. தலைவியின் பாதத்தின் மென்மை, இடையின் மென்மை என்பவற்றை விளக்குக?

❁ <u>பாதத்தின் மென்மை</u>

தலைவியின் பாதத்தின் மென்மைத் தன்மையானது இங்கு மிகையாக வர்ணிக்கப்படுகின்றது. அதாவது அனிச்சம் பூவும், அன்னத்தின் இறகும் தலைவியின் பாதங்களுக்கு வருத்தம் அளிப்பனவாம். பூக்களிலே மென்மையானது அனிச்சம்பூ, அதுபோல் அன்னத்தின் இறகும் மிகவும் மென்மையானது. ஆக இவ்விரண்டும் பாதங்களிற்கு இதமளிப்பவை. ஆயினும் இவை தலைவியின் பாதங்களிற்கு நெருஞ்சி முள் போல வருத்தமளிக்கின்றனவாம். இதன் மூலம் தலைவியின் பாத மென்மையானது மிகமிக உயர்வாக உரைக்கப்படுகிறது.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்..

எனும் குறள் மூலம் இதனை இங்கு காணலாம்.

❁ <u>இடையின் மென்மை</u>

இங்கு தலைவியின் இடையின் மென்மைத் தன்மை சிறப்புற கூறப்பட்டுள்ளது. அதாவது அனிச்சம் பூவினை காம்பு நீக்கமால் அவளது கூந்தலில் சூடினால் அதன் பாரம் தாங்காமல் அவளது இடையானது முறிவடைந்து விடுமாம். மென்மையான பூவான அனிச்சம் பூவானது கூந்தலில் சூடுவதால் அவளது இடையினை பற்றி நல்ல மேளங்கள் ஒலிக்கமாட்டாது. உயர்வு நவிற்சியணி மூலம் இந்நிலையானது விளக்கப்படுகிறது. இதனை

" அனிச்சம் பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை..

எனும் குறள் மூலம் இதனை இங்கு காணலாம்.

05. நலம்புனைந்து உரைத்தல் எனும் அதிகாரத்தில், அணிச்சிறப்பு பற்றி எடுத்துரைக்குக.?

இவ்வதிகாரத்தில் உவமையணி, மற்றும் உயர்வு நவிற்சியணி மேலும் உருவகஅணி என்பன இளையோடி இருக்கின்றன.

❁ உவமைணிகள்

❋ மலர் காணின் மையாத்தி...

தலைவியின் கண்கள் மலர்களை ஒத்திருப்பதாக கூறப்படுகிறது, அதாவது தலைவியின் கண்கள் மலர் போன்று உள்ளன என்பது இதன் பொருள்.

❋ வேய்த்தோள் அவட்கு ..

தலைவியின் தோள்கள் மூங்கிலைப் போன்றன என உவமிக்கப்படுகின்றது.

உவமானம் – மூங்கில்
உவமேயம் – தோள்
பொதுத்தன்மை – அழகு

❋ மலரன்ன கண்ணாள்..

தலைவியின் கண்கள் மலர் போன்று உள்ளன என கூறப்படுகிறது.

உவமானம் – மலர்
உவமேயம் – கண்கள்
பொதுத்தன்மை – அழகு

மேலும்,

- அவிர் மதிக்கு போல மாதர்..
- மாதர் முகம் போல

என்பவற்றையும் உவமையணிகளாக கருதலாம்.

❁ உயர்வுநவிற்சியணிகள்

❋ நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை..

தலைவியின் இடையின் மென்மை அதாவது நுண்ணிய தன்மை இங்கு உயர்வாக வெளிப்படுத்தப்படுகிறது. அதாவது அனிச்சம் பூவையும் தாங்காது அவள் இடை ஒடிந்து விடுமாம்.

❋ அனிச்சமும் அன்னத்தூவியும் மாதர் அடிக்கு..

அனிச்சம் பூவும், அன்னத்தின் இறகும் தலைவியின் பாதங்களை நெருஞ்சி முள் போல் வருந்தச் செய்கின்றனவாம். பாதங்களின் நுண்ணிய மென்மைத் தன்மை இவ்வணி மூலம் இங்கு வெளிப்படுகிறது.

மேலும்,

- மாதர் முகத்து மறு உண்டோ..
- ஒளிவிட வல்லலையே காதலை..
- முகமொத்தியாயின் பலர்காணத் தோன்றல் மதி..

என்பனவும் உயர்வு நவிற்சியணியின் வெளிப்பாடேயாகும்.

❁ உருவக அணிகள்

- முறிமேனி – உடல் தளிர் நிறம்
- முத்தம் முறுவல் – பல் முத்தாகவிருக்கும்
- வெறிநாற்றம் – நறுமணம் இயல்பாக இருக்கும்

www.ikeau.lk

புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்
அலகு 11

01. இக் கவிதையின் ஆசிரியர் யார்?

- குறிஞ்சித் தென்னவன்

02. இக் கவிதை வெளிப்படுத்தி நிற்கும் பிரதான கருத்தியல் யாது?

- மலையக மக்களின் கடுமையான உழைப்பும், அவர்கள் அனுபவிக்கும் துயரங்களும், விடுதலை பெற முயற்சிக்கும் அவர்களது வேட்கையும் புலப்படுகின்றது.

03. பெருங் குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன் வருவோம்..

அ. கோதையர் எனச் சுட்டப்பட்டோர் யார்?

- மலையகப் பெண்கள்

ஆ. இங்கு புலப்படும் அணியினை இனங்காண்க?

- உவமையணி – குன்று நிகர்த்த மனவுறுதி

04. எம்மைச் சிக்க வைத்திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி எறிய துணிவு கொள்வோம்..

அ. இவ்வடிகளில் யாருடைய கூற்றாக அமைகின்றது?

- தோட்டத் தொழில் செய்யும் பெண்கள்

ஆ. எதற்கு துணிவு கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகின்றது?

- தம்மை சிக்க வைத்திருக்கும் அடிமைத் தனத்தில் இருந்து வெளி வருவதற்கு.

05. இக் கவிதையில் மலையப் பெண்களின் கடின உழைப்பு / துயரம் நிறைந்த வாழ்கை எவ்வாறு காட்டப்படுகின்றது?

→ காலையில் பனி காயும் முன்பு குளிர்க் காற்றையும் பொருட்படுத்தாமல் தொழிலுக்கு செல்லுதல்.

→ தொழிற்சாலையில் சங்கு ஊதுவதற்கு முன் அங்கு சென்று தேயிலைத் தளிரினை கிள்ளுதல்

→ அவர்களது மேனி குளிரில் நடுங்கினாலும், விரல்கள் விறைத்திடினும், விழிகள் பளபளத்தாலும், கைகள் பரபரத்தாலும் அவற்றை பொருட்படுத்தாமல் தொழிலில் ஈடுபடுதல்.

→ பக்கத்தில் உள்ள செடிகளில் சிக்கிக் கொண்டாலும் அதிலிருந்து விடுவித்துக் கொண்டு தொழில் செய்தல்

→ நெஞ்சத்திலே பல்வேறு துன்பங்கள் நிறைந்திருந்தாலும் தொடர்ந்தும் தொழிலில் ஈடுபடுதல்

→ முதலாளி வர்க்கத்தினருக்கு அடிமைப்பட்டு துன்பத்தோடு தொழிலில் ஈடுபடுதல்

06. மலையகப் பெண்களின் விடுதலைக்கான வேட்கை எவ்வாறு புலப்படுகின்றது?

இக் கவிதையின் ஊடாக, மலையகத் தோட்டத் தொழில் செய்யும் பெண்களின் விடுதலை வேட்கையினை,

→ தம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்ற முதலாளி வர்க்கத்தினருக்கு எதிராக துணிவு கொண்டு செயற்பட வேண்டும் அதற்காக துணிவு கொள்ள வேண்டும் எனக் கூறுதல் இதனை, " எம்மை சிக்க வைத்திருக்கும் அடிமைத் தளையினை தூக்கி எறியத் துணிவு கொள்வோம்.. எனும் வரிகளின் ஊடாகக் காண முடிகின்றது.

www.ikedu.lk

→ மேலும்,வெட்டிய செடியில் இருந்து வெளிவரும் அரும்பினைப் போல எம் விடுதலைக்கான எண்ணங்கள் மனதிலே எழ வேண்டும் என்பதும், எம்மை மூடியிருக்கும் பேரிருள் எனும் அடிமை நிலையினை விரட்டிடத் துணிவு கொள்வோம் எனக் கூறுதல்

→ அடுத்து, எம்மை என்றும் அடிமைச் சிறையில் வைத்திருக்கும் ஏமாற்றுக் காரர்களின் எண்ணங்களை அடக்கிட மலை போல் மன உறுதி கொண்டவர்களாக மங்கையராகிய நாம் போராட முன்வர வேண்டும் எனக் கூறுவதும் அவர்களது விடுதலை வேட்கையினைப் புலப்படுத்துகின்றது.

07 . இக் கவிதையில் புலப்படும் அணிகளை எடுத்துக்காட்டி விளக்குக?

✷ உவமையணிகள்

→ வெண்டிக்காய் போன்ற மலையகப் பெண்களின் விரல்கள்
வெண்டை விரல்கள் விறைத்திடினும்..

உவமானம்	– வெண்டிக்காய்
உவமேயம்	– பெண்களின் கைகள்
பொதுத்தன்மை	– மென்மை, நீண்ட

→ கெண்டை மீன் போன்ற மலையகப் பெண்களின் கண்கள்
கெண்டை விழிகள் பளபளக்கும்..

உவமானம்	– கெண்டை மீன்
உவமேயம்	– பெண்களின் கண்கள்
பொதுத்தன்மை	– பளபளப்பு, அழகு

→ மலையினைப் போன்ற மன உறுதி கொண்டு போரிட முன்வருதல்

உவமானம்	– மலை
உவமேயம்	– பெண்களின் மனம், மன உறுதி
பொதுத்தன்மை	– உறுதி, வலிமை

→ தேயிலைச் செடியில் இருந்து வெளிவரும் அரும்பினைப் போல மனதினில் எண்ணங்கள் மேலெழ வேண்டும்

உவமானம்	– வெளிவரும் அரும்பு
உவமேயம்	– மனதில் தோன்றும் எண்ணம்
பொதுத்தன்மை	– மேலெழுதல்

08. கவிதையில் பெண்களது உரிமைச் சிந்தனைகள் எவ்வாறு வெளிப்படுகின்றது?

→ பெண்கள் கல்வி கற்கக் கூடாது, உரிமை பற்றி அவர்கள் பேசிடல் கூடாது எனக் கூறுவோர் மண்ணில் புதையும் படி பல அரிய கலைகள் படைப்போம் எனக் கூறுதல்

→ சாதி, சமய பேதங்கள் நீக்கி, பெண்கள் தாழ்வானவர்கள் எனும் எண்ணத்தையும் போக்கி புவியில் புது மாற்றத்தினை ஏற்படுத்திட வேண்டும்

→ பெண்ணுக்கு தனியான நீதி எனக் கூறும் நீதிகளை அழித்து பெண்களுக்கான அறங்களை படைத்திடுவோம் எனக் கூறுதல்

09. இக் கவிதையில், கவிதையாசிரியரின் கவிச்சிறப்புக்கள் பற்றிக் குறிப்பிடுக?

→ ஓசை நயம் மிக்கதாக கவிதை அமைந்திருத்தல்
→ மலையக மக்களின் துன்ப வாழ்க்கையினை கவிதையில் காட்டியிருத்தல்
→ வாசகரிடையே கவலை உணர்வை ஏற்படுத்துதல்
→ அணிகளைக் கையாண்டிருத்தல்
→ இலகுவான சொல்லாட்சியும், சிறந்த மொழிநடைச் சிறப்பும் இடம்பெறுதல்

பாட அலகுகளில் உள்ள பாடப்பகுதிகளின் இலக்கிய ஆசிரியர்கள்

- புத்தகசாலை - பாரதிதாசன்
- பத்தி எழுத்துக்கள் - கவிக்கோ அப்துல் ரஹ்மான்
- இனிதுஎன
  - முளி தயிர் பிசைந்த - கூடலூர்கிழார்
  - அமுதம் - சச்சிதானந்தன்
- தாய்ப்பசு - அகிலன்
- கம்பராமாயணம் - கம்பர்
- உரிமையும் கடமையும் - டாக்டர் மு. வரதராசன்
- எலியம் - உமா வரதராஜன்
- புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் - குறிஞ்சித் தென்னவன்
- கானல் வரி - இளங்கோவடிகள்
- தெளிவு - மு. பஷீர்
- காலம் தோறும் அகம்
  - சங்ககாலம் - சுனைப்பூக். - கபிலர்
  - ச. ம. காலம் - சிரல்வாய் - மதுரைக் கண்ணங்கூத்தனார்
  - பல்லவர் காலம் - மத்தளம் - ஆண்டாள்
  - சோழர் காலம் - உள்ளம் - புகழேந்தி
  - நாயக்கர் காலம் - நேற்றிராவந் - காளமேகப்புலவர்
- வஞ்சியர் காண்டம் - பிரளயன்
- யேசு கிறிஸ்து - பாரதியார்
- மின்மினிகளால் ஒரு தோரணம் - முல்லை முஸ்ரிபா
- தீவு மனிதன் - பார்த்தீபன்
- புகழ் வேட்கை - அ.ச. ஞான சம்பந்தன்

www.lkedu.lk